ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351





வியாழன் ❖ பிப்ரவரி. 15, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 128 ❖ ரூ.10

தமிழக பேரவையில் ஒரே நாடு, ஒரே தேர்தல், தொகுதி மறுவரையறைக்கு

# எதிர்ப்பு

## அனைத்து மாநிலங்களிலும் ஆட்சி அமைத்து, மத்தியில் அமையும் ஆட்சி கவிழுமானால் அனைத்து மாநிலங்களையும் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவார்களா?; முதல்வர் ஸ்டாலின்

**சென்னை : பிப். 15–**

**ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு எதிராக தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தனித்தீர்மானம் தாக்கல் செய்தார்.**



தனித்தீர்மானத்தை தாக்கல் செய்து முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், "நாட்டையும், நாட்டு மக்களையும் பதற்றத்தில் வைக்கும் இரண்டு முக்கியமான பிரச்சினைகள் குறித்து இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியே ஆகவேண்டிய நெருக்கடியான அரசியல் சூழ்நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. ஒன்று; ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற மிக மோசமான எதேச்சிதிகர திட்டம். இதனை நாம் கடுமையாக எதிர்த்தாக வேண்டும். இரண்டாவது; மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறைக்க நினைக்கும் சதி. இதனை முறையடிக்க வேண்டும்.

இந்த இரண்டு திட்டங்களும் மக்களாட்சியை குலைக்கும் செயல் என்பதால், இவற்றுக்கு எதிராக நாம் அனைவரும் ஒருசேர குரல் கொடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். முதலில் ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது எத்தகைய ஆபத்து நிறைந்தது என்பதை விளக்க விரும்புகிறேன். ஒரே நாடு, ஒரே தேர்தல் எனும் முறை முற்றிலுமாக நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று. அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்துக்கு எதிரானது. அரசியலமைப்பு சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சுதந்திரமான, நேர்மையான தேர்தலுக்கு முற்றிலும் எதிரானது. ஒரே நேரத்தில் தேர்தல் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்றும் அப்படி கலைப்பது அரசியல் சட்டவிரோதம் என்பதாலும் இந்த நடைமுறையை நாம் எதிர்க்க வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் ஆட்சி அமைத்து, மத்தியில் அமையும் ஆட்சி கவிழுமானால் அனைத்து மாநிலங்களையும் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவார்களா?.

இதுவரை, 1952, 1962, 1972 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் எல்லை நிர்ணய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் 1976ம் ஆண்டு வரை ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பு பிறகும், மக்களவை, மாநிலங்களவை, சட்டமன்ற பேரவை இடங்கள் மறுநிர்ணயம் செய்யப்பட்டு வந்தன. இவ்வாறு மறுநிர்ணயம் செய்யும்போது மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவை, மாநிலங்களவை, சட்டமன்ற பேரவை இடங்கள் குறைக்கப்படுகின்றன. அதாவது மக்கள் தொகை கட்டுப்பாடு என்னும் கொள்கையை தீவிரமாக செயல்படுத்தி மக்கள் தொகையை குறைத்துக்கொண்ட மாநிலங்களுக்கு தரப்படும் தண்டனையாக இது அமைந்துள்ளது. இதனால் மக்கள் தொகை குறையும் மாநிலங்களுக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையும். மக்கள் தொகை கட்டுப்பாட்டில் ஆர்வம் செலுத்தாத மாநிலங்கள் கூடுதல் பரிசை பெறும். அவற்றுக்கான பிரதிநிதித்துவம் அதிகமாகும். இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை எதிர்த்தாக வேண்டும். மக்கள் தொகை குறைவதால் ஜனநாயக உரிமைகள் மாநிலங்களுக்கு குறையக் கூடாது என்பதற்காக அரசியலமைப்பில் 42வது சட்டத்திருத்தம் செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு வரை தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றம் செய்வதை மத்திய அரசு நிறுத்தி வைத்திருந்தது. அதுபோலவே, அரசியலமைப்பு சட்டத்தில் 84வது திருத்தமும் செய்யப்பட்டது.

தொகுதிகளின் எண்ணிக்கையில் 2026ம் ஆண்டு வரை மாற்றம் செய்யப்படாது என்றும் 2026ம் ஆண்டுக்குப் பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டப் பேரவையில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படும் என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தொகுதிகளின் எண்ணிக்கையை குறைத்தால் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் பெரும் பின்னடைவை சந்திக்கும். 1971ம் ஆண்டு தமிழ்நாடும், பிஹாரும் கிட்டத்தட்ட ஒரே அளவிலான மக்கள் தொகையை கொண்டிருந்ததால் மக்களவையில் ஒரே அளவிலான தொகுதிகளை கொண்டிருந்தன. இன்று தமிழ்நாட்டு உடன் ஒப்பிடுகையில் பிஹாரில் மக்கள் தொகை ஒன்றரை மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் மத்திய அரசு மேற்கொள்ள உத்தேசித்துள்ள தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையால் தமிழ்நாட்டில் தற்போதைய மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டமன்ற பேரவை தொகுதிகளின் எண்ணிக்கை வட மாநிலங்களின் எண்ணிக்கையை விட விகிதாசாரத்தில் குறைந்துவிடும். இதனை நினைத்து பார்த்தால் அச்சமாக இருக்கிறது.

தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக இவர்கள் குரல்கொடுத்து வருகிறார்கள். மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை குறைத்துவிட்டால் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துவிடும். 39 எம்பிக்கள் இருக்கும்போதே மத்திய அரசிடம் கெஞ்சிக்கொண்டிருக்கிறோம். இதிலும் குறைந்தால் என்ன ஆகும். தமிழ்நாடு கோரிக்கை வைக்கும் பலத்தை இழக்கும், சக்தியை இழக்கும் அதனால் உரிமையை இழக்கும். இதனால் தமிழ்நாடு பின்தங்கிவிடும். எனவே, தொகுதி மறுவரையறை என்ற பெயரால் தொகுதிகளின் எண்ணிக்கையை எந்த சூழலிலும் குறைக்க கூடாது என்கிறோம். மக்கள் தொகையை குறைந்ததை காரணம் காட்டி தென் மாநிலங்களுக்கு தொகுதிகளை குறைப்பது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை பலவீனமடைய செய்யும். எனவே, அனைத்து மாநிலங்களிலும் மக்கள் தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கையை தீவிரமாக மேற்கொள்ளும் வரை தொகுதிகளின் எண்ணிக்கையை இப்படியே தொடர செய்வது சரியாகும். இதுபோன்ற பாரபட்சம்தான் நிதி ஒதுக்கீட்டிலும், நிதி பகிர்விலும் காட்டப்படுகிறது. மக்கள் தொகையை காரணம் காட்டி தென் மாநிலங்களுக்கு வரி வருவாயின் பங்கு குறைந்துவிட்டது.

2026ம் ஆண்டுக்கு பிறகு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மேற்கொள்ளப்படவிருக்கும் தொகுதி மறுவரையறை நடவடிக்கையை கைவிட வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் 1971ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை எந்த அளவில் உள்ளனவோ அதே அளவில் இருக்க சட்டத்திருத்தம் செய்ய வேண்டும். மத்திய அரசை வலியுறுத்தும் இந்த தீர்மானத்தை இந்த சட்டப்பேரவை ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்." என்று பேசினார் முதல்வர் ஸ்டாலின்.


அதனைத்தொடர்ந்து, தொகுதிகள் எண்ணிக்கைகள் குறைக்கப்பட கூடாது என்று அ.தி.மு.க. சார்பில் தளவாய் எம்.எல்.ஏ. வலியுறுத்தினார். இது தொடர்பாக அ.தி.மு.க. சார்பில் 10 கோரிக்கைகள் கொடுக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதன் பிறகு அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன்தீர்மானங்கள்ஏன் கொண்டு வரப்பட்டு உள்ளது என்று விளக்கம் அளித்து பேசினார். இதையடுத்து தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

---

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# மாசித்திருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது





*திருச்செந்தூர், பிப். 15–*

*அறுபடை வீடுகளுள் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் மாசித்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று கோலாகலமாகத் தொடங்கியது. கொடிமரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு திருவிழா கொடியேற்றப்பட்டது.*

*மாசித்திருவிழா கொடியேற்றத்தை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கடலில் புனிதநீராடி சுவாமி தரிசனம் செய்தனர். 12-நாட்கள் நடைபெறும் திருவிழாவில் நாள்தோறும் சுவாமி வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. 20-ந் தேதி சிவப்பு சாத்தியும், 21-ந் தேதி பச்சை சாத்தியும் நடைபெறுகிறது. மாசித்திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் 23-ந் தேதியன்று நடைபெறுகிறது.*

---

# கல்வியும், சுகாதாரமும் நம் திராவிட மாடல் அரசின் இரு கண்கள் : அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

*சென்னை, பிப். 15–*

*கல்வியும் சுகாதாரமும் நம்திராவிடமாடல்அரசின் இருகண்கள்என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*



*இதுதொடர்பாகஎக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர்; கல்வியும், சுகாதாரமும் நம் திராவிட மாடல்அரசின்இருகண்கள். கலைஞர் எல்லோரும் கல்வி கற்க பள்ளி, கல்லூரிகளை திறந்தார்கள். கட்டணமில்லா பஸ் பயணம், உதவித்தொகை, முதல் தலைமுறை பட்டதாரிக்கு கட்டண விலக்கு என்ற கலைஞர் வழியில், கல்வி வளர்ச்சிக்காக காலை சிற்றுண்டி திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் என ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்திவருகிறார்கள்.*

*அந்த வகையில், பட்டப்படிப்புக்காக சேரவுள்ளமாணவர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற உயரிய நோக்கில் நம் திராவிட மாடல் அரசு தமிழ் நாடெங்கும் மாவட்ட ஆட்சியர்கள் வளாகத்தில் சிறப்பு 'கல்விக்கடன் முகாம்களை' நாளை (இன்று–பிப்.15) நடத்துகிறது. இந்த முகாம்களில் தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் பங்கேற்று பயனடைய மாணவ மாணவியர்களை வாழ்த்துகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.*

---

# பொன்முடிக்கு எதிரான வழக்கு : விசாரணை தேதிகளை மாற்றி உயர் நீதிமன்றம் உத்தரவு

*சென்னை : பிப். 15–*

*முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு எதிராக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த மறு ஆய்வு மனுக்களின் விசாரணையை பிப்ரவரி 19-ம் தேதி முதல் 22-ம் தேதி வரை என்பதற்கு பதிலாக மார்ச் 12-ம் தேதி முதல் மார்ச் 15-ம் தேதி வரை என மாற்றி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*



*சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து தற்போதைய அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் ஐ.பெரியசாமி ஆகியோர் விடுவிக்கப்பட்டது மற்றும் விடுதலை செய்யப்பட்ட உத்தரவை மறு ஆய்வு செய்யும் வகையில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ் தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்தார். அதேபோல முன்னாள் அமைச்சர்களான பொன்முடி, ஓ.பன்னீர்செல்வம் மற்றும் வளர்மதி ஆகியோருக்கு எதிரான வழக்குகளையும் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்தார்.*

*இதனிடையே, இதற்கு எதிராக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு மற்றும் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், இந்த வழக்குகளை யார் விசாரிப்பது என்பது குறித்து சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி முடிவெடுக்க உத்தரவிட்டது.*

*இதையடுத்து, முன்னாள், இந்நாள் அமைச்சர்களுக்கு எதிராக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த வழக்குகளை நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் தொடர்ந்து விசாரிக்க தலைமை நீதிபதி ஒப்புதல் அளித்தார்.*

*இதன் தொடர்ச்சியாக, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் வளர்மதிக்கு எதிரான இந்த 4 வழக்குகள் பிப்ரவரி 27, 28, 29 மற்றும் மார்ச் 5-ம் தேதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி, அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு எதிரான வழக்கின் விசாரணை பிப்ரவரி 12, 13-ம் தேதியும், முன்னாள் அமைச்சர் பொன்முடி மீதான வழக்கு பிப்ரவரி 19 முதல் 22-ம் தேதி வரையும் விசாரிக்கப்படும் என்று நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவிட்டிருந்தார்.*

*இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, பொன்முடி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, பொன்முடி மீதான வழக்கை பிப்ரவரி 19 முதல் 22-ம் தேதி வரை விசாரிப்பதற்கு பதிலாக, மார்ச் 12 தேதி முதல் 15ம் தேதி வரை விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி, விசாரணை தேதிகளை மாற்றி உத்தரவிட்டார்.*

---

# "தொகுதி மறுவரையறை குறித்த தமிழக அரசின் கவலையை பாஜக புரிந்துகொள்கிறது" – தனித்தீர்மானம் குறித்து வானதி சீனிவாசன்

சென்னை : பிப். 15–

"மத்திய அரசின் தொகுதி மறுவரையறை குறித்த தீர்மானத்தின் மீதான கவலையை, அக்கறையை தமிழக பாஜக புரிந்துகொள்கிறது" என்று பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் ஒரே நாடு, ஒரே தேர்தல்; தொகுதி மறுவரையறை ஆகிய திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தனித் தீர்மானங்கள் கொண்டு வந்தார். இந்த தீர்மானங்கள் மீதான விவாதத்தில் பேசிய பாஜக சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன், "தென் மாநிலங்கள் பல்வேறு சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளாலும், மக்கள் தொகையை கட்டுப்படுத்திய விதத்திலும் ஒரு சிறப்பான இடத்தை அடைந்துள்ளன. வருங்காலத்தில் தொகுதிகள் எண்ணிக்கை குறையும்போது நமக்கான குரல் நாடாளுமன்றத்தில் ஒலிப்பதற்கான வாய்ப்பு மறுக்கப்படுமோ என்ற அச்சம் நியாயமானது. பாஜகவை பொறுத்தவரை இந்த தீர்மானத்தின் மீதான கவலையை, அக்கறையை புரிந்துகொள்கிறது. நிச்சயமாக எந்த இடத்தில் என்ன நடவடிக்கை வேண்டுமோ, தமிழக பாஜக முழுமையாக அந்த தீர்மானத்தை புரிந்துகொண்டு நடவடிக்கை எடுக்கும்." என்று பேசினார்.

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர் அப்பாவு, "தீர்மானத்தை ஆதரிக்கிறீர்கள், அப்படித்தானே" என்று கேள்வி எழுப்ப, அதற்கு பதிலளித்த வானதி, "ஆதரிக்கிறோம் என்ற வார்த்தை சபாநாயகருக்கு வேண்டும்" என்று கூற அவையில் சிரிப்பலை எழுந்தது. தொடர்ந்து பேசிய வானதி, "தீர்மானத்தின் கவலையை புரிந்துகொள்கிறோம். அதில் அக்கறை எடுத்துக்கொள்கிறோம். வேண்டிய இடத்தில் நாங்கள் பேசுகிறோம் என எல்லாத்தையும் சொல்லிட்டேன்." என்றார். "ஒரே நாடு, ஒரே தேர்தல் என்கிற இரண்டாவது தீர்மானத்தை



பொறுத்தவரை உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. 1952ல் இருந்து நடந்த பொதுத்தேர்தல்களை பார்த்தால், அன்று நடைபெற்ற தேர்தல் முறை சிறிது சிறிதாக காலத்துக்கேற்ப மாற்றம் அடைந்தது. இதையெல்லாம் நாம் கடந்துவந்தோம். மக்கள் தொகை, கால மாற்றம், தொழில்நுட்ப வசதி இவற்றுக்கேற்ப தேர்தல் நடைமுறைகள், தேர்தல் செலவினங்கள் இவற்றையெல்லாம் நாம் மாற்றிக்கொண்டிருக்கும் போது, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்கிற அவசியம் ஏன் வருகிறது என்பதை பார்க்க வேண்டும்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஒவ்வொருவரும் ஒரு கற்பனை செய்துகொண்டு நாமாகவே அச்சத்துக்கு சென்று காலத்துக்கேற்ப நடக்க வேண்டிய மாறுதல்களை தடுப்பதாக இருக்கக் கூடாது. ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து இப்போது முன்னாள் குடியரசுத் தலைவர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவுக்கு யார் வேண்டும் என்றாலும் யோசனை தெரிவிக்கலாம். அப்படி இருக்கும்போது உள்ளாட்சித் தேர்தலையும் ஒரே நாடு, ஒரே தேர்தலில் சேர்க்கப்போவதாக தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தில் உள்ளாட்சித் தேர்தலையும் இணைத்துக் கொள்ள போவதாக எந்த வார்த்தையும் இடம்பெறவில்லை.

முழுவதுமாக நாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கு மட்டுமே ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தின் கீழ் தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தில் எழுப்பப்படும் சந்தேகங்கள் எல்லாம் உண்மை தான். அவை தான் அதிலிருக்கும் சவால்கள். ஒவ்வோர் ஆண்டும் பல மாநில தேர்தல் நடக்கக்கூடிய இந்தியா என்ற மிகப்பெரிய நாட்டில் ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை சீர்திருத்தமாக பார்க்க வேண்டுமே தவிர யாரோ ஒருவர் ஆட்சி வருவதற்காக நடத்தப்படும் தேர்தல் கிடையாது. அது தேவையில்லாத பயம். தேவையில்லாத பயத்தின் அடிப்படையில் இந்த தீர்மானம் வருவதாக நாங்கள் நினைக்கிறோம். தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி தனது நெஞ்சுக்கு நீதி புத்தகத்திலேயே ஒரே நாடு, ஒரே தேர்தல் கொண்டுவருவதற்காக தனது ஆதரவான கருத்துக்களை தெரிவித்துள்ளார். அவரது கருத்துக்களையும் தமிழக அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே இந்த தீர்மானம் அவசியமற்றது என பாஜக சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# ஜாக்டோ – ஜியோவின் வேலைநிறுத்தப் போராட்டம் ஒத்திவைப்பு : முதல்வரை சந்தித்த பின் அறிவிப்பு

சென்னை: பிப். 15–

இன்று நடைபெற இருந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஒத்திவைக்கப்படுவதாக ஜாக்டோ ஜியோ அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தை ஜாக்டோ - ஜியோ அமைப்பினர் அறிவித்து இருந்த நிலையில், அந்த போராட்ட அறிவிப்பை திரும்ப பெற்றனர். முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆலோசனை நடத்திய நிலையில், இந்தப் போராட்ட அறிவிப்பை திரும்பப் பெற்றனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த ஜாக்டோ ஜியோ அமைப்பினர், "பழைய ஓய்வூதிய திட்டத்தை பல மாநிலங்கள் செயல்படுத்திவிட்டன. இதை முதல்வரிடம் தெரியப்படுத்திய



போது, "நான் தராமல் யார் தர போகிறார்கள். நிச்சயம் பழைய ஓய்வூதியம் வழங்கப்படும். மேலும், மிக விரைவில் நிதி நிலை சரி செய்த பிறகு உங்கள் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக சரி செய்யப்படும்" என்று முதல்வர் ஸ்டாலின் எங்களிடம் உறுதியளித்தார்.

முதல்வரை சந்தித்ததன் அடிப்படையில் அவர் அளித்த உறுதியின் அடிப்படையில் இன்று நடைபெற இருந்த போராட்டத்தை ஒத்திவைக்க முடிவெடுத்துள்ளோம். சட்டப்பேரவை கூட்டத்தொடர் முடிவதற்குள் எங்களது பொருளாதார கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை ஒத்திவைப்பது என்று முடிவு செய்துள்ளோம். 19-ம் தேதிக்கு பிறகு ஜாக்டோ - ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர் மீண்டும் கூடி அடுத்தகட்ட முடிவை தெரிவிப்போம். முதல்வர், அமைச்சர்கள் எல்லோரிடம் இதனை வலியுறுத்தியுள்ளோம்" என்று தெரிவித்தனர்.

# மீண்டும் மத்திய பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வாகிறார் எல்.முருகன் : ஒடிசாவில் அஸ்வினி வைஷ்ணவ் போட்டி

டெல்லி : பிப். 15–

மத்திய பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் மீண்டும் தேர்வாகிறார்.

மாநிலங்களவைக்கு வரும் 27ம் தேதி தேர்தலும், அன்றைய தினமே வாக்கு எண்ணிக்கையும் நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும். மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை பாரதிய ஜனதா கட்சி வெளியிட்டுள்ளது.

மாநிலங்களவைத் தேர்தலில் மத்திய அமைச்சர் எல்.முருகன் மத்திய பிரதேசத்தில் இருந்து போட்டியிடுகிறார். மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ஒடிசா மாநிலத்தில்



இருந்து மாநிலங்களவைக்கு போட்டியிடுகிறார். நீலகிரியில் எல்.முருகன் போட்டியிடுவார் என்று கூறப்பட்ட நிலையில் மாநிலங்களவை வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது எல்.முருகன் மத்தியப்பிரதேச மாநிலத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார்.

மத்திய அமைச்சர் எல்.முருகனின் எம்.பி. பதவிக்காலம் வரும் ஏப்ரலில் முடிவடைய உள்ளதால் மீண்டும் போட்டியிடுகிறார். நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மாநிலங்களவை உறுப்பினராகிறார். எல். முருகன் 2021 சட்டமன்ற தேர்தலில் தாராபுரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். மத்திய அமைச்சரானதை அடுத்து 2021-ல் மத்தியப்பிரதேசத்தில் இருந்து எம்.பி.யாக தேர்வானார்.



▶ திருச்சிராப்பள்ளி கலையரங்கில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மேலாண்மைக்குழு தலைவர்களுக்கான மாநாட்டில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், பள்ளியின் மேம்பாட்டிற்காகவும், மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும், சிறப்பாக தொடந்து செயல்பட்டு வரும் பஞ்சாயத்து தலைவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணப்பிரியா, மாவட்ட கல்வி அலுவலர்கள் சங்கரநாராயணன், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் உதவி திட்ட அலுவலர் அன்புசேகரன், பள்ளி மேலாண்மை குழுத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ சென்னை தண்டையார்பேட்டை காமராஜர் நகர் பகுதியில் எழுது பொருள் மற்றும் அச்சகத் துறை சார்பில் அரசு அச்சக பணியாளர்களுக்கு ரூ. 34.50.கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் 96 குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. கீழ் தளத்தில் பார்க்கிங் வசதி பூங்காக்கள் விளையாட்டு திடல் என நவீன வசதிகள் உடன் நடைபெற்று வரும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே . சேகர்பாபு, சென்னை மேயர் ப்ரியா, சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் மண்டல குழு தலைவர் நேதாஜி கணேசன் ஆகியோர் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்



▶ சென்னை தண்டையார்பேட்டையில் வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதா வின் 76 வது பிறந்தநாளை முன்னிட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ் தலைமையில் அமைப்பு செயலாளர் ஆர்.மனோ, முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது, கூட்டத்தில் அனைவருக்கும் மட்டன் பிரியாணி உணவு பரிமாறப்பட்டது. இதில் பகுதி வட்ட பிற அணி நிர்வாகிகள் பாக பொறுப்பாளர்கள், மகளிர் அணியினர். உள்ளிட்ட பலர் இருந்தனர்.

# "அவர்கள் விவசாயிகள், கிரிமினல்கள் அல்ல" வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் மகள் ஆதரவு

புதுடெல்லி : பிப். 15–

டெல்லியை நோக்கி பேரணி செல்லும் விவசாயிகளுக்கு ஆதரவாக மறைந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் மகள் மதுரா சுவாமிநாதன் கருத்து தெரிவித்துள்ளார்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு பாரத ரத்னா விருதை மத்திய அரசு அண்மையில் அறிவித்தது. இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் எம்.எஸ்.சுவாமிநாதனின் மகளும் பொருளாதார நிபுணருமான மதுரா ஸ்வாமிநாதன்



காணொலி வாயிலாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது பேசிய அவர், "பஞ்சாப் விவசாயிகள் இன்று (பிப்.13) டெல்லியை நோக்கி பேரணி செல்கின்றனர். ஹரியாணாவில் அவர்களுக்காக சிறைச்சாலை தயாராகி வருவதாகவும், அவர்களை தடுக்க தடுப்பு வேலிகள் உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் செய்தித்தாள்களின் மூலம் தெரிந்து கொண்டேன்.

அவர்கள் விவசாயிகள், கிரிமினல்கள் அல்ல. இந்தியாவின் முன்னணி விஞ்ஞானிகளான உங்கள் அனைவரிடமும் நான் கேட்டுக் கொள்வது இதைத்தான். நாம் நம்முடைய 'அன்னதாதா'க்களிடம் பேச வேண்டும். அவர்களை கிரிமினல்களைப்போல நடத்தக் கூடாது. இந்த பிரச்சினைக்கு நாம் தீர்வு காணவேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள். எனது தந்தையும் வேளாண் விஞ்ஞானியுமான எம்.எஸ். சுவாமிநாதனை நாம் தொடர்ந்து கவுரவிக்க எண்ணினால், எதிர்காலத்துக்காக நாம் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் அனைத்து உத்திகளிலும் விவசாயிகளை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

# பில்கிஸ் பானு வழக்கின் தீர்ப்பை மறுசீராய்வு செய்ய வேண்டும் : உச்சநீதிமன்றத்தில் குஜராத் அரசு முறையீடு

புதுடெல்லி : பிப். 15–

கடந்த 2002ம் ஆண்டு குஜராத்தில் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் நடந்தது. இதையடுத்து, மாநிலம் முழுவதும் இஸ்லாமியர்களுக்கு எதிரான கலவரங்கள் அதிகரித்தது. இதில், 5 மாத கர்ப்பிணியான பில்கிஸ் பானு கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். அவரது உறவினர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 11 பேருக்கும் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது. அந்த தண்டனை காலம் முடிவடைவதற்குள் அவர்களை கடந்த 2022, ஆகஸ்ட் 15ம் தேதி குஜராத் அரசு விடுதலை செய்தது. அவர்களுக்கு ஆரத்தி எடுத்து மாலை அணிவித்து சிலர் வரவேற்பளித்தனர். இது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.



இந்த விடுதலையை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகி சுபாஷினி அலி உட்பட 3 பேர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் "இந்த வழக்கு மகாராஷ்டிராவில் நடந்ததால் குற்றவாளிகளை முன்கூட்டியே விடுதலை செய்ய குஜராத் அரசுக்கு அதிகாரம் இல்லை. மகாராஷ்டிரா அரசுதான் 11 பேரின் விடுதலை குறித்து முடிவெடுக்க முடியும். எனவே, குற்றவாளிகளை விடுதலை செய்த உத்தரவை ரத்து செய்கிறோம். பெண்களுக்கு எதிரான கொடூரமான குற்றங்களை மன்னிக்க முடியாது. குற்றவாளிகள் 2 வாரங்களுக்குள் சிறை அதிகாரிகளிடம் ஆஜராக வேண்டும். குற்றவாளிகளுடன் இணைந்து அவர்களுக்கு உடந்தையாக குஜராத் அரசு செயல்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை குஜராத் அரசு பறித்துள்ளது' என்று கடுமையாக விமர்சித்தனர்.

இந்நிலையில், குஜராத் மாநில அரசின் மீதான விமர்சனங்கள் குறித்து மறுபரிசீலனை செய்ய அம்மாநில அரசு உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளது. அதில், தங்களுக்கு எதிரான பாதகமான கருத்துக்களை நீக்க வேண்டும் என்று கேட்டு கொண்டிருக்கிறது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நாளை பாரத் பந்த் நடத்த விவசாயிகள் அழைப்பு : தமிழக காங்கிரஸ் ஆதரவு

சென்னை : பிப். 15–

பாரத் பந்த் வெற்றிகரமாக தமிழகத்தில் நடக்க அனைத்து மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்களும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த 2014 மக்களவை தேர்தலின் போது விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக கூட்டுவேன், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரையின்படி விவசாயிகளின் சாகுபடிக்கான அடக்க விலையோடு 50 சதவீதம் கூடுதலாக விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்குவேன் என்று வாக்குறுதி கொடுத்து ஆட்சியில் அமர்ந்தார் நரேந்திர மோடி. பிரதமர் மோடியின் ஆட்சி 10 ஆண்டுகளை நோக்கி நிறைவுபெறப் போகிறது.

ஆனால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மூன்று வேளாண் சட்டங்களை நிறைவேற்றி விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான உத்தரவாதம் வழங்குகிற வகையில் சட்டப் பாதுகாப்பு அளிக்காமல் மக்களவையில் அச்சட்டத்தை நிறைவேற்றினார். இதை எதிர்த்து பல்வேறு விவசாய அமைப்புகள் தலைநகர் டெல்லியில் ஓராண்டு காலம் கடும் வெயிலையும், குளிரையும் பொருட்படுத்தாமல் போராடினார்கள். நூற்றுக் கணக்கானவர்கள் உயிரிழந்தார்கள்.

அன்றைக்கு நடைபெறவிருந்த தேர்தலை மனதில் கொண்டு மூன்று வேளாண் கருப்பு சட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக கூறி விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்தார். ஆனால் இதுவரை விவசாயிகளின் எந்த கோரிக்கையையும் மத்திய பாஜக அரசு நிறைவேற்றவில்லை. மத்திய பாஜக அரசின் விவசாயிகள் விரோதப் போக்குக்கு எதிராக பல்வேறு விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு ஹரியாணாவில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை தலைநகரை நோக்கி 'டெல்லி சலோ' என்ற



முழக்கத்துடன் விவசாயிகள் பேரணி புறப்பட்டது.

அந்த பேரணியை முடக்குகிற வகையில் உத்திரப் பிரதேசம், ஹரியாணா பாஜக அரசுகள் நெடுஞ்சாலைகளில் விவசாயிகள் பேரணி செல்லவிடாமல் தடுக்க சிமெண்ட் தடுப்புகள், இரும்பு ஆணிகள், பின்னப்பட்ட இரும்பு வலைகள் ஆகியவற்றை பல இடங்களில் அமைத்து பல்வேறு தடைகளை ஏற்படுத்தினார்கள். அதையும் மீறி பெருந்திரளான விவசாயிகள் பேரணியில் திரண்டதை சகித்துக் கொள்ளாத பாஜக அரசு, கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி விவசாயிகள் மீது தடியடி நடத்தி பேரணியை சிதறடிக்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.

இதன் மூலம் காவல் துறையினரின் அடக்கு முறையை விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. விவசாய சங்கங்கள் தங்களது கோரிக்கைகளாக விளைபொருளுக்கு வழங்கப்படுகிற குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு சட்டப் பாதுகாப்பு, விவசாயிகளின் விளைபொருள் கொள்முதலில் கார்பரேட்டுகளை அனுமதிக்கக் கூடாது, பயிர் காப்பீட்டு திட்டம், கடன் நிவாரணம் , மாதந்தோறும் குறைந்தபட்ச நிவாரணத் தொகை என பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது குறித்து மோடி அரசு விவசாயிகளோடு பேச்சுவார்த்தை நடத்த தயாராக இல்லை. பாஜக அரசின் விவசாய விரோத போக்குக்கு எதிராக பல்வேறு விவசாய சங்கங்கள் நாளை காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை நாடு முழுவதும் பாரத் பந்த் நடத்த வேண்டும் என அழைப்பு விடுத்திருக்கின்றன. இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அகில இந்திய காங்கிரஸ் தமிழ்நாடு காங்கிரசுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி தமிழகத்தில் பாரத் பந்த் வெற்றிகரமாக நடைபெற 77 மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகளும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் போராட்டம் என்பது தலைநகர் டெல்லியோடு முடிவடைந்து விடாமல் அங்கே போராடுகிற விவசாயிகளுக்கு ஆதரவாக இன்றைக்கு நாடு முழுவதும் ஆதரவு பெருகி வருகிறது. விவசாயிகள் பிரச்சினை என்பது நாட்டிலுள்ள அனைத்து விவசாய பெருங்குடி மக்களின் நலனை உள்ளடக்கியதாகும்.

எனவே, மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள் தங்கள் பகுதியில் உள்ள விவசாய அமைப்புகளோடு கலந்து பேசி நாளைய தினம் அனைவரும் பச்சை துண்டை அணிந்து பாரத் பந்துக்கு ஆதரவாக துண்டு பிரசுரங்களை வெளியிட்டு, பொது மக்களிடம் விநியோகம் செய்ய வேண்டுகிறேன். பாரத் பந்த் வெற்றிகரமாக தமிழகத்தில் நடக்க அனைத்து மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர்களும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்" என கே.எஸ்.அழகிரி கூறினார்.

# தனக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு தடை கோரி சுப்ரீம் கோர்ட்டில் அண்ணாமலை மேல்முறையீடு

சென்னை : பிப். 15,

இரு மதத்தினர் இடையே வெறுப்புணர்வைத் தூண்டும் வகையில் பேசியதாக தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு தடை கோரி உச்சநீதிமன்றத்தில் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை மேல்முறையீடு செய்துள்ளார்.

கடந்த 2022-ம் ஆண்டு யூடியூப் சேனல் ஒன்றுக்கு பேட்டி அளித்த பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, தீபாவளி பண்டிகை குறித்து சில கருத்துக்களை தெரிவித்து இருந்தார். அப்போது, கிறிஸ்தவ மிஷனரிகள் தான் முதலில் தீபாவளி பண்டிகைஅன்றுபட்டாசு வெடிக்கக் கூடாது என உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததாக குறிப்பிட்டிருந்தார். அண்ணாமலையின் இந்த பேச்சு இரு மதத்தினரடைய



விழிப்புணர்வை தூண்டும் வகையில் இருப்பதாக சேலத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் பியூஷ் மனுஷ், சேலம் நீதிமன்றத்தில் அண்ணாமலைக்கு எதிராக புகார் மனு தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பாக நேரில் ஆஜராக நீதிமன்றம் அண்ணாமலைக்கு சம்மன் அனுப்பியிருந்தது. இதற்கு எதிராகவும், தன் மீதான புகாரை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியும், அண்ணாமலை சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனுவில் தனது பேச்சு தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டது என அவர் தெரிவித்திருந்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், அண்ணாமலை தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ததோடு, அவர் மீதான வழக்கை ரத்து செய்ய மறுப்பு தெரிவித்தார்.

மேலும் சேலம் நீதிமன்றம் சட்டத்திற்கு உட்பட்டு மனுவை விசாரிக்கலாம் எனவும் அவர் உத்தரவிட்டார். இதனிடையே உயர் நீதிமன்ற நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து அண்ணாமலை தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. தனக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என அண்ணாமலை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பனையஞ்சேரி புதிய வழித்தட பேருந்தை டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ ஓட்டி வந்து அசத்தினார்



ஊத்துக்கோட்டை, பிப்15-

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் புதிய வழித்தடத்தில் ஒரு பஸ் இயக்கப்படும் என போக்குவரத்து துறை அமைச்சர் சட்டசபையில் உறுதி அளித்தார்.இதன் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம்,கும்மிடிப்பூண்டி பஸ் நிலையத்தில் இருந்து எல்லாபுரம் ஒன்றியம் பனையஞ்சேரி கிராமத்தை இணைக்கும் வகையில் அரசு போக்குவரத்து கழக பேருந்து தடம் எண்: 115 பி என்ற பஸ் இயக்கப்பட்டது.

இந்தப் பேருந்து கும்மிடிப்பூண்டி பஸ் நிலையத்தில் இருந்து புதுகும்மிடிப்பூண்டி, சிறுபுழல்பேட்டை, பாத்துபாளையம், பில்லாகுப்பம், குருவராஜகண்டிகை, ராஜாகண்டிகை, ஐயர்கண்டிகை,கண்ணூர், பாலவாக்கம், சுப்பிரமணியநகர்,ஆரணி வழியாக பனையஞ்சேரி கிராமம் வந்து சேரும்.மீண்டும் இதே வழித்தடத்தில் இந்தப் பேருந்து செல்லும்.

இந்த பேருந்தை இயக்கி வைக்கும் நிகழ்ச்சி பனையஞ்சேரி கிராமத்தில் நடைபெற்றது. இதனை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். பின்னர்,இந்தப் பேருந்தை பனையஞ்சேரி கிராமத்தில் இருந்து ஆரணி மசூதி வரையில் ஓட்டி வந்தார்.

முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில், புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கப்படுவதால் பொதுமக்கள் கும்மிடிப்பூண்டி சென்று வரும் பயண நேரம் இப்பிருந்தால் குறையும், இதனால் விவசாயிகளும், இப்பகுதியைச் சேர்ந்தவர்களும் பயன்பெறுவர் என்று டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பேசினார்.மேலும், பனையஞ்சேரி கிராம மக்கள் தங்களது பகுதிக்கு சமுதாய கூடம் மற்றும் ரேஷன் கடை கட்டிடம் வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தக் கோரிக்கையையும் விரைவில் நிறைவேற்றி தருவேன் என்று டி.ஜே.கோவிந்தராஜன் எம் எல் ஏ உறுதி அளித்தார்.

இந்நிகழ்ச்சியில்,மாவட்ட பொருளாளர் ரமேஷ், எல்லாபுரம் ஒன்றிய கழக செயலாளர்கள் பி.ஜே.மூர்த்தி, ஆ.சத்தியவேலு,பொதுக்குழு உறுப்பினர் ஏ.வி.ராமமூர்த்தி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி,கலை இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் வி.பி.ரவிக்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டிசங்கர்,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன், ஒன்றிய துணை அமைப்பாளர் வடமதுரை அப்பன்,வழக்கறிஞர் முனுசாமி,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பனையஞ்சேரி பி.எஸ்.ரமேஷ்,ஊராட்சி மன்ற தலைவர் எம்.எஸ்.கிரி, துணைத் தலைவர் ராக்கியப்பன்,ஆரணி பேரூர் திமுக பொருளாளர் கு.கரிகாலன்,பேரூராட்சி மன்றத்துணைத்தலைவர் வழக்கறிஞர் சுகுமார் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள்,அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டத்தில் வணிக நிறுவனங்களின் கடைகளில் ட்ரேட் லைசன்ஸ் சம்பந்தமான சில நிபந்தனைகளை புதுவையில் உள்ளது போன்று தளர்த்துவது சம்பந்தமாகவும் மேலும் திருமண மண்டபங்களில் உள்ள டிரேட் லைசென்ஸில் உள்ள குறைபாடுகளை தளர்த்துவது சம்பந்தமாகவும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜீம் தலைமையில் நகராட்சி ஆணையர் சத்யா உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி நேற்று தீர்வு கண்டார்கள். மேலும் தெற்கு தொகுதியில் பல்வேறு பணிகளில் டெண்டர் எடுப்பது குறித்தும் ஆனையருடன் பேசி நேற்று சுமூகத் தீர்வு கண்டார்கள். இந்நிகழ்வில் நகராட்சி ஆணையர் சத்யா உதவி பொறியாளர் லோகநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் வணிக நிறுவனத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

# காரைக்கால் மஸ்தான் சாஹிப் தர்கா கந்தூரி விழா கலெக்டர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்



காரைக்கால், பிப். 15-

காரைக்காலில் அமைந்துள்ள புகழ்பெற்ற மஸ்தான் சாஹிப் தர்காவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் கந்தூரி விழா இந்த ஆண்டு வரும் 20-ஆம் தேதி முதல் மார்ச் 3-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் நேற்று மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சியர் முனைவர் மணிகண்டன் , தலைமையில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் பள்ளி வாசல் நிர்வாகிகள், சமாதான கமிட்டி உறுப்பினர்கள் முக்கிய பிரமுகர்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் பேசிய மாவட்ட ஆட்சியர் காரைக்கால் மாவட்டத்தில் அமைதியான மக்கள் வாழும் இடம் இது என்றும் முதன் முதலில் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்வது பெருமையாக உள்ளது என்றும் சென்ற ஆண்டைப் போலே இந்த ஆண்டும் சிறப்பாக இவ்விழா நடைபெற மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் கூறினார்கள். மேலும் நகராட்சி மூலம் செய்யப்படும் தூய்மை பணிகள் குறித்தும் மேலும் பொதுப்பணித்துறை மூலம் சாலை வசதிகளை சரி செய்வது குறித்தும் வேளாண் துறை மற்றும் வனத்துறை உதவியுடன் மரக்கிளைகளை கழித்து ரோட்டை சீர் செய்வது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டன.

மேலும் தீயணைப்பு துறை மூலம் தீயணைப்பு வாகனம் தயார் நிலையில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் நலவழித்துறை மூலம் மருத்துவ முகாம்கள் அமைத்து பொதுமக்களுக்கு சேவைபுரியும்படியும் ஆட்சியர் சம்பந்தப்பட்ட துறைகளை கேட்டுக்கொண்டார்கள். மேலும் அண்டை மாநிலத்தில் இருந்து சந்தேகப்படும்படி இளைஞர்கள் விழாவில் இருந்தால் உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

மேலும் சமாதான கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கோயில் நிர்வாகிகள் காவல் துறையுடன் இணைந்து செயல்பட கேட்டுக் கொண்டார். மேலும் ஆட்சியர் அனைவரிடமும் கருத்துகளை கேட்டறிந்தார். இன்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மணிஷ் , காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்பிரமணியன்மேலும் வட்டாட்சியர் செல்லமுத்து மற்றும் பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் சந்திரசேகரன் மற்றும் பொதுப்பணித்துறை, நலவழித்துறை, தீயணைப்புத் துறை நகராட்சி நிர்வாகம் சுகாதாரத்துறை உள்ளிட்ட துறை அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# ராஜஸ்தானிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு சோனியா காந்தி வேட்புமனு தாக்கல்



ஜெய்ப்பூர்:பிப்.15,காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற தலைவர் சோனியா காந்தி, ராஜஸ்தானில்நடைபெறஉள்ள மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட நேற்று வேட்புமனு தாக்கல் செய்தார். ஜெய்ப்பூரில் இருந்து அவர் வேட்பு மனு தாக்கல்செய்தபோது அவருடன் ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி வத்ரா உடன் இருந்தனர்.

ராஜஸ்தானில் இருந்து ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவி நிச்சயம் என்பதால் அந்தப் பதவிக்கு, சோனியா காந்தி வேட்பு மனு தாக்கல் செய்கிறார். ஐந்து முறை மக்களவை உறுப்பினராக பணியாற்றிய சோனியா காந்தி, முதல் முறையாக மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்க இருக்கிறார். கடந்த 1997 டிசம்பரில் சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அவர் கட்சியில் சேர்ந்த சில மாதங்களில் காங்கிரஸின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து 1999-ம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தின் அமேதி தொகுதியில் சோனியா காந்தி முதல்முறையாக போட்டியிட்டார். பின்னர் அவர் உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதிக்கு மாறினார்.

கடந்த மக்களவைத் தேர்தலிலும் ரேபரேலி தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்திய சோனியா காந்தி, வரும் மக்களவைத் தேர்தலில் ரேபரேலியில் போட்டியிட மாட்டார் என்று கூறப்பட்டது. ராஜஸ்தானிலிருந்து அவர் மாநிலங்களவை எம்பியாக தேர்வு செய்யப்படுவார் என்று தகவல்கள் வெளியான நிலையில் நேற்று அவர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். வரும் ஏப்ரல் மாதத்துடன் 15 மாநிலங்களைச் சேர்ந்த 56 மாநிலங்களவை உறுப்பினர்கள் ஓய்வுபெற இருக்கிறார்கள். புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் பிப்.27ம் தேதி நடைபெற உள்ளது. அதற்காக வேட்பு மனு தாக்கல் செய்ய இன்று கடைசிநாளாகும்.

ராஜஸ்தான் சட்டப்பேரவையில் காங்கிரஸுக்கு போதிய எம்எல்ஏக்கள் உள்ளனர். அங்கு தேர்தல் நடைபெற உள்ள 3 இடங்களில் ஒன்றில் காங்கிரஸ் நிச்சயம் வெற்றி பெறும் என்பதால், சோனியா காந்தி அங்கிருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்படுவார். முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் வரும் ஏப்ரல் மாதத்தில் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து அந்த இடம் காலியாவது குறிப்பிடத்தக்கது. கடந்த 1964 ஆக. முதல் 1967 பிப். வரை மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி. அதன் பின்னர் காந்தி குடும்பத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராக நுழைய இருப்பவர் சோனியா காந்தி என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு பெற்ற காவலர் நல சங்கத்தின் சொந்த கட்டிடத்தை முன்னாள் காவல்துறை இயக்குனர் சேகர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

திருவள்ளூர் , பிப்.14-

திருவள்ளூர் மாவட்டத்தில் ஓய்வுபெற்ற காவலர்களுக்கான நல சங்கம் திருவள்ளூர் ஊத்துக்கோட்டை சாலையில் இயங்கி வந்தது. சங்கத்திற்கு சொந்த இடம் இல்லாததால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அதிகாரிகளிடம் சொந்த இடம் கேட்டு கோரிக்கை மனு அளிக்கப்பட்ட நிலையில் திருவள்ளூவரை சேர்ந்த தொழிலதிபர் கிஷன்லால் தாமாக முன்வந்து தனக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் சுமார் 40 லட்சம் மதிப்பிலான இடத்தை அன்பளிப்பாக அளித்தார்,



இதனை அடுத்து திருவள்ளூர் மாவட்ட ஓய்வு பெற்ற காவலர் நலச்சங்கம் சார்பில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இதனை அடுத்து திருவள்ளூர் மாவட்ட ஓய்வு பெற்ற காவலர் நல சங்கத்திற்கு சொந்தமான கட்டிடத்தை முன்னாள் காவல்துறை இயக்குனர் சேகர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்த திறப்பு விழா நிகழ்ச்சியில் முன்னாள் காவல்துறை இயக்குனர் காந்திராஜன், தமிழ்நாடு ஓய்வு பெற்ற காவலர் நல சங்க கூட்டமைப்பின் தலைவர் வேலுச்சாமி, முன்னாள் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கஜேந்திரகுமார், முன்னாள் காவல்துறைகண்காணிப்பாளர் வரதராஜன் உள்ளிட்ட சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஓய்வு பெற்ற காவலர் நல சங்கத்தின் நிர்வாகிகள் 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# ‘குற்றச் செயல்களை தடுக்க மதுரை நகர் முழுவதும் 14,000 சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிப்பு’



மதுரை : பிப். 15-

குற்றச் செயல்களை தடுக்க மதுரை நகர் முழுவதும் சுமார் 14,000 சிசிடிவிக்கள் பொருத்தி கண்காணிக்கப்படுகிறது என மதுரை ஓபுளா படித்துறை ரவுண்டானாவில் புதிய புறக்காவல் நிலைய திறப்பு விழாவில் காவல் ஆணையர் ஜே.லோகநாதன் தெரிவித்தார்.

மதுரை நகரில் குற்றச்செயல்களை தடுக்க, முக்கிய இடங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்திய புறக்காவல் நிலையங்கள் திறக்கப்பட்டு, கண்காணிக்கப்படுகின்றன. இதன்படி, மதுரை வைகை தென்கரையில் ஓபுளா படித்துறை பகுதியில் ஏற்கெனவே இருந்த புறக்காவல் நிலையம் புதுப்பிக்கப்பட்டு, 4 சிசிடிவி கேமராக்களுடன் கூடிய புறக்காவல் நிலையமாக மாற்றப்பட்டது. மீனாட்சி அம்மன் கோயில் காவல் உட்கோட்ட உதவி ஆணையர் காமாட்சி முயற்சியில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. காவல் ஆணையர் ஜே.லோகநாதன் திறந்து வைத்து, சிசிடிவி கேமராக்களின் செயல்பாட்டை தொடங்கிவைத்தார். இதன்பின், அவர் செய்தியாளர்களிடம் கூறியது: ’’இப்பகுதியில் குற்றச் சம்பவங்களை தடுக்க, ஏற்கெனவே இப்பகுதியில் இருந்தபுறக்காவல்நிலையத்தை சிசிடிவி கேமராக்களுடன் நவீனப்படுத்தி திறந்துள்ளோம். தற்போது, 4 கேமராக்களுடன் செயல்படும். இது ரவுண்டானா பகுதியாக இருப்பதால் மேலும், 4 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படும். இதன்மூலம் மதிச்சியம், இஸ்மாயில்புரம், நெல்பேட்டை பகுதி மற்றும் வைகை வடக்கரை, தென்கரை ரோட்டில் வழிப்பறி போன்ற குற்றச் செயல்களை தடுக்க முடியும்.

இந்த புறக்காவல் நிலையத்தில்பொருத்தியசிசிடிவி கேமராக்கள் மூலம் காவல் கட்டுப்பாட்டு அறை, காவல் ஆணையர் அலுவலகத்திலுள்ள எல்இடி திரைகள் மூலம் கண்காணிக்கலாம். இரவு, பகலில் சுழற்சி முறையில் காவலர்கள் பணியில் இருப்பார்கள். காவலர்கள் இருப்பதால் இந்த பகுதியில் குற்றங்கள் குறைய வாய்ப்புள்ளது. குற்றச் செயல் புரிவோரும் தவிர்ப்பர். அவசர தேவைக்கு காவல் நிலையத்தை அணுக முடியாத மக்கள், அருகிலுள்ள புறக்காவல்நிலையத்தில் தகவல் தெரிவிக்கலாம். சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளின் தொடர்பு எண்களும் புறக்காவல் நிலையத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதனை பயன்படுத்தி தகவல் கூறலாம்.

மதுரை மாநகர் முழுவதும் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் சிசிடிவிக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் குற்றங்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதுரை - நத்தம் மேம்பாலத்தில் வாகனங்களை வேகமாக செல்வோர் மீது ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறைபொருத்திய சிசிடிவிக்கள் மூலமும் தொடர்ந்து கண்காணிக்கிறோம். மேலும், காவல் துறை ரோந்து வாகனம் மூலமும் கண்காணிக்கப்படுகிறது” என்றார்.

நிகழ்ச்சியில் துணை காவல் ஆணையர் பாலாஜி, மீனாட்சி கோயில் காவல் உதவி ஆணையர் காமாட்சி, விளக்குத்தூண் காவல் ஆய்வாளர்கள், மணிகண்டன், தீபா, போக்குவரத்து காவல் ஆய்வாளர் ரமேஷ் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்

# வாசுதேவநல்லூரில் பிப் 18 ல் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் விளக்கப் பொதுக்கூட்டம் : எம்எல்ஏ ராஜா அறிக்கை..

சங்கரன்கோவில், பிப்.14-

தென்காசி நாடாளுமன்ற தொகுதி வாசுதேவநல்லூரில் தமிழக உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் விளக்கப் பொதுக்கூட்டம் பிப் 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது.

இது குறித்து வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில், தலைமை திமுக அறிவுறுத்தலின்படி தென்காசி நாடாளுமன்ற தொகுதி வாசுதேவநல்லூரில் வரும் 18ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு தமிழக உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் விளக்கப் பொதுக்கூட்டம் வாசுதேவநல்லூர் காமராஜர் திடல், கலைஞர் நூற்றாண்டு மேடையில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகிக்கின்றார், தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் வே. ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தலைமை செயற்குழு உறுப்பினர் யூ.எஸ்.டி. சீனிவாசன் வரவேற்புரை நிகழ்த்துகின்றார். வாசுதேவநல்லூர் பேரூர் திமுக செயலாளர் ரூபி பாலசுப்ரமணியன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகின்றார்.

நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர்மீட்புதுறைஅமைச்சர். கே. கே.எஸ்.எஸ். ஆர் ராமச்சந்திரன், சபாபதி மோகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர். இந்த கூட்டத்தில் ஒருங்கிணைந்த தென்காசி வடக்கு, தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய ,நகர, பேரூர் திமுக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் திமுகவினர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# உட்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு அரிமா சங்கம் சார்பில் புத்தகங்கள் வழங்கும் விழா

அரியலூர் : பிப். 15-

உட்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, அரிமா சங்கம் சார்பில் ரூ. 10,149 மதிப்பிலான புத்தகங்கள் வழங்கப்பட்டது.

இது பற்றி ஆண்டிமடம் விளந்தை அரிமா சங்க நிர்வாகி ராஜேந்திரன் வெளியிட்ட செய்தி குறிப்பு: அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அருகே,

உட்கோட்டை கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள நூலகத்துக்கு, ரூ. 10,149 மதிப்புள்ள 165 புத்தகங்களை, பன்னாட்டு அரிமா சங்கத்தின் மண்டலம் 10 - "எழில் மொழி" மண்டல மாநாட்டினை சிறப்பாக நடத்திய லயன் ராஜேந்திரன் வழங்கினார்.



மேலும் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும், முதல் உதவி என்ற நூலையும் வழங்கினார். அனைத்து ஆசிரியர்களுக்கும் பொன்னாடை அணிவித்தார். தான் பயின்ற பள்ளிக்கு செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாக இதை கருதி செய்த இவ்விழாவில், தலைமை ஆசிரியர் தலைமை ஏற்க, அரிமா சங்கத்தின் மாவட்ட தலைவர் லயன்ஸ் சண்முகம் கலந்துகொண்டு, சிறப்புரை ஆற்றினார். லயன் கோதண்டராமன் விழா நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தார். பள்ளி தமிழாசிரியர் ஸ்ரீகாந்த் நன்றி கூற மாணவர்கள் முன்னிலையில் விழா இனிமையாக நடைபெற்றது.

# டில்லியில் நடைபெறும் விவசாயிகள் போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி காரைக்காலில் ஆர்ப்பாட்டம்

காரைக்கால்,பிப்,15

சர்தார் சர்வன் சிங் பந்தேர் ஒருங்கிணைப்பிலான கிசான் மஸ்தூர் மோர்ச்சா மற்றும் சர்தார் ஜக்ஜீத் சிங் தல்லேவால் ஒருங்கிணைப்பிலான கட்சி சார்பற்ற ஐக்கிய விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் 100 சங்கங்கள் ஒன்றிணைந்து "தில்லி ச்சலோ" என்று நாட்டின் தலைநகரை நோக்கி முன்னெடுத்த போராட்டத்திற்கு ஆதரவாக புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் ஐக்கிய விவசாயிகள் சங்கம், இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம், டாடா மேஜிக் ஓட்டுநர் நலச்சங்கம், தமிழ்நாடு போக்குவரத்து கழக ஸ்டாப் கரப்ஷன் பேரவை, பஜன்கோவா ஊழல் எதிர்ப்பு, மேம்பாடு மற்றும் ஊழியர் நலச்சங்கம் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் இரவு 7 மணி முதல் 10 மணி வரை காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகே டாக்டர் எஸ். அனந்த்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய சங்கங்கள் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளை இந்திய ஒன்றிய அரசு ஏற்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் உள்ள முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடந்த 2020 - 2021 ஆம் ஆண்டிற்கான நிலுவையில் உள்ள பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகை தற்போது வரை 434 காரைக்கால் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. அது வழங்கப்படும் வரை போராட்டம் தொடரும். கடந்த 2023 ஆம் ஆண்டு பருவம் தவறி பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு தொகை விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 தேதிகளில் பெய்த தொடர் கான மழையால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மற்றும் காரைக்கால் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு இழப்பீடு வழங்க வேண்டும் என்று அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பஜன்கோவா விவசாயக் கல்லூரியில் சுமார் 100 மாணவ மாணவியர் காலாவதியான உணவு பொருட்களால் பாதிப்படைந்து , அவர்களில் சுமார் 40 மாணவியர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து 28.11.2023 அன்று மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்ட நியாயாதிபதி விசாரணை கமிட்டி 04.12.2023 முதல் பல நாட்கள் நடத்திய அதிரடி சோதனைக்கு பிறகு தற்போது பஜன்கோவா டீன் பதவி வகிக்கும் புஷ்பராஜ் என்பவரை பணியிடை நீக்கம் செய்ய அரசுக்கு பரிந்துரைத்ததாக அரசு வட்டாரங்களில் பேசப்பட்டதை தொடர்ந்து, மர்மமான அந்த விசாரணையின் விவரம் அந்தரங்கமாக உள்ள நிலையில் பெரும் லஞ்சம் கை மாறியதால் அந்த கோப்பு எங்கேயோ நின்று உள்ளதாக சந்தேகம் எழுந்த சூழ்நிலையில், அந்த உயர்மட்ட குழுவின் அறிக்கை என்ன என்று தெரிவிக்காமல் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள தருணத்தில், அதிகாரப்பூர்வ ஆவணங்களை வைத்து தகவல் திரட்டி மத்திய புலனாய்வு துறை விசாரணை செய்ய புகார் கொடுக்க வேண்டும் என்று பொது கூட்டத்தில் விவாதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சுதந்திரகுமார் தலைமையிலான தேசிய பசுமைத் தீர்ப்பாயம் ஒரு விண்ணப்ப எண் 124 / 2013 கொண்ட வழக்கில் கடந்த 12.09.2013 அன்று பிறப்பித்த ஆணையை அவமதித்து, அதில் விதிக்கப்பட்ட நடைமுறைகளை அத்து மீறி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை இல்லாமல், பொதுமக்களிடம் ஆலோசனை கேட்கும் கூட்டம் நடத்தாமல், குடியிருப்பு மற்றும் திட்டத்திற்கு மத்தியில் இடைப்பகுதி விடாமல், வெளிப்படைத்தன்மை இன்றி ஒரு தனியார் நிறுவனத்திற்கு தவறாக லாபம் கிடைக்கவும் மற்றும் அங்கு வசிக்கும் மக்களுக்கு தவறான பாதிப்பு நேரும் விதமாக, விவசாயத்திற்கு பயன்படும் என்று மடை மாற்றம் செய்து, தீய உள்நோக்கத்துடன் பாரபட்சமாக, ஒருதலைப்பட்சமாக, ஒரவஞ்சனையாக, சுயலாபத்திற்காக பொதுநலனுக்கு குந்தகம் விளைவிப்பது ஊழல் என்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர், சட்ட மன்ற உறுப்பினர், அரசு செயலர் மற்றும் அமைச்சர் மீது மத்திய புலனாய்வு துறையிடம் புகார் அளித்து பிறகு நடவடிக்கை இல்லாவிட்டால் உயர் மற்றும் உச்ச நீதி மன்றதில் வழக்கு தொடரப்படும் என்று புதுத்துறை, தர்மபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை விவகாரத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக அத்திபடுகை விவசாயி குருமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். தலத்தெரு விவசாயி மோகனசுந்தரம் கோரிக்கை விளக்க உரை ஆற்றினார். மேலக்காசாக்குடி விவசாயி ரகுவரன் விவசாயத் துறை மற்றும் மற்ற துறைகளில் உள்ள ஊழல், லஞ்சம் பற்றி பேசினார். தென்பாதி விவசாயி வீரராகவன் சிறப்புரை ஆற்றினார். விவசாயிகள் ரவி, சுப்ரமணியன், கலியமூர்த்தி மயிலை கப்பூர் விவசாயிகள் வெங்கட்ராஜூ, ராஜேந்திரன் மற்றும் பல முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர்.

டாடா மேஜிக் ஓட்டுநர் நலச்சங்கதின் நிருவாகிகள் சந்திரசேகர், செல்லத்துரை தமிழ்நாடு போக்குவரத்து கழக ஸ்டாப் கரப்ஷன் பேரவையின் காமராஜ், ராமஸ்ரீனிவாசன் , பஜன்கோவா ஊழல் எதிர்ப்பு, மேம்பாடு மற்றும் ஊழியர் நலச்சங்கதின் சச்சிதானந்தன், ரமேஷ், அந்தந்த சங்க உறுப்பினர்கள், விவசாயக் கூலி தொழிலாளர்கள், மற்றும் புதுத்துறை கிராம மக்கள் பெருந் திரளாக கலந்துகொண்டனர்.

சபாபதி, சதிஷ், மாதவன், ரங்கராஜன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். இயற்கை விவசாயி பொன்பேத்தி ராஜேந்திரன் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி உரைத்தார்.

# ஜனநாயக நாட்டில் மக்கள் எந்த மூலைக்கும் செல்ல உரிமை உண்டு : சாலைகளில் தடுப்பு கம்பிகள் அமைத்தது ஏன்?

## மத்திய அரசுக்கு ஐகோர்ட் கேள்வி



அரியானா : பிப். 15–

ஜனநாயக நாடான இந்தியாவில் மக்கள் செல்லும் சாலைகளை தடுப்பு கம்பிகள் அமைத்தது ஏன் என்று அரியானா அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ள பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதிமன்றம் இது தொடர்பாக விளக்கம் அளிக்க மத்திய அரசுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

விவசாயிகளின் போராட்டத்தை தடுக்கும் விதமாக எல்லையில் தடுப்புகளை அமைத்து இணைய சேவையை துண்டித்த அரியானா அரசுக்கு எதிராக பஞ்சாப், அரியானா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. உயர்நீதிமன்ற தற்காலிக தலைமை நீதிபதி ஜி.எஸ். சந்தவாலியா அமர்வில் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஜனநாயக நாட்டில் விவசாயிகளின் போராட்டத்துக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. விவசாயிகள் செல்லும் வழிகளில் ஆணிகள் பதிக்கப்பட்ட மின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது என வாதிட்டார். அரியானா அரசு சார்பில், சட்டம்ஒழுங்குபிரச்சனை இருப்பதாலேயே 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்கிறார். மேலும் அவர் டெல்லி அரசிடம் அனுமதி பெற்று குறிப்பிட்ட இடத்தில் போராட்டம் நடத்தியிருக்கலாம் என்றும் பரிந்துரைத்தார். அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி ஜனநாயக நாட்டில் மக்கள் எந்த மூலைக்கும் நகர்ந்து செல்வதற்கு உரிமை உண்டு என்று தெரிவித்ததோடு, அப்படி செல்லக்கூடிய விவசாயிகளை தடுத்து நிறுத்தியது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு அரியானா அரசு வழக்கறிஞர். டிராக்டர்களில் ஆயுதங்களை பொருத்தி விவசாயிகள் அணிவகுத்து வந்ததால்சட்டம்ஒழுங்கை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று பதிலளித்தார். இந்த விவகாரத்தில் பஞ்சாப், அரியானா அரசுகள் மற்றும் மத்திய அரசு விளக்கம் அளிக்கும்படி நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட தலைமை நீதிபதி வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

### சதுரங்கப் போட்டியில் மாநில அளவில் வெற்றிபெற்று

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சாதனை



புதுக்கோட்டை, பிப்.15–

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான சதுரங்கப் போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளனர். தஞ்சாவூர் மாவட்ட சதுரங்க சங்கம் மற்றும் லயன்ஸ் கிளப் பட்டுக்கோட்டை இணைந்து மாணவர்களுக்கான மாநில அளவிலான சதுரங்கப்போட்டியை நடத்தியது, அதில் வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர் கே.லோகித் 6க்கு 5 என்ற புள்ளிகள் பெற்று மாநில அளவில் வெற்றி பெற்று வெற்றிக்கோப்பையையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

மேலும் புதுக்கோட்டையில் மாஸ்டர்செஸ் அகாதமி குழந்தைகளுக்கான மாநில அளவிலான சதுரங்கப்போட்டிகளை நடத்தியது, அதில் பள்ளி மாணவர்கள் லோகித் டாப் 20, குருநாத் டாப் 15, நேத்ரா டாப் 11, கனிஷ்கா டாப் 10 ஆகிய தகுதிகளில் மாநில அளவில் வெற்றி பெற்று பரிசுகளும் சான்றிதழ்களும் பெற்றுள்ளனர். சதுரங்கப்போட்டிகளில் வெற்றிபெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களை பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி பரிசுகள் வழங்கிப் பாராட்டினார், மாநில அளவில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் செஸ் பயிற்சி ஆசிரியை லலிதா ஈஸ்வரி உள்ளிட்ட ஆசிரியர்கள் பாராட்டுகளை தெரிவித்தனர்.

## தேசிய கேரம் போட்டியில் வென்றவர்களுக்கு எம்.ஆர். கல்லூரி தாளாளர் சான்றிதழ்களும், பரிசும் வழங்கும் நிகழ்ச்சி



அரியலூர் : பிப். 15–

தேசிய கேரம் போட்டியில் வென்றவர்களுக்கு, சான்றிதழ் மற்றும் பரிசுகளை, எம்.ஆர். கல்லூரி தாளாளர் வழங்கினார்.

இந்திய அளவிலான 48வது ஆண்கள், பெண்கள், ஜீனியர் கேரம் சாம்பியன்ஷிப் போட்டிகள் மதுரை எஸ்.ஆர்.எம். பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக, அரியலூர் மாவட்ட கேரம் கழகத் தலைவரும், எம்.ஆர்.கல்வி நிறுவனங்களின் தாளாளருமாகிய எம்.ஆர்.இரகுநாதன் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற கேரம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

இந்திய கேரம் அசோசியேஷன் தேசிய பொதுச் செயலாளர் பாரதி நாராயண், நிர்வாக இயக்குனர் அதுல் மெகரா, தமிழ்நாடு கேரம் கழகத்தலைவர் நாசர்கான், தமிழ்நாடு செயலாளர் அர்ஜுனா விருது பெற்ற மரிய இருதயம், மதுரை கேரம் சங்கத்தலைவர் சீனிவாசன், செயலாளர் கார்த்திகேயன், எஸ்.ஆர்.எம். பொறியியல் கல்லூரி முதல்வர் துரைராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ ரோட்டரி மாவட்டம் 3000 தின் சார்பாக மகாபலிபுரத்தில் அறம் மாவட்ட மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிங்கப்பெண்ணே என்ற தலைப்பில் புதுக்கோட்டை நகரத்தில் வசிப்பவருக்கும், விராலிமலை அருகே கிராமத்தில் வசிக்கும் ஆதரவற்ற இரண்டு விதவைகளுக்கு வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக இரண்டு பேருக்கு இலவச ஆட்டோ ரூபாய் ஒரு லட்சத்து எம்பதாயிரம் சங்கத் தலைவர் .அசோகன் வழங்க அதை ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஆனந்தஜோதி, ராஜ்குமார் பெற்றுக் கொண்டார். உடன் சங்க ஆலோசகர் மாருதி கண.மோகன்ராஜா, செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர், மேனாள் நகர மன்ற துணைத் தலைவர் சேட் என்ற அப்துல்ரஹ்மான், பொறியாளர் சுப்பிரமணியன், யோகேஸ்வரன், சேகர், தயாளன், ராமகிருஷ்ணன், பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சுண்டேகுப்பம் ஊராட்சி, மணிநகர் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக, அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் வளாக நேர்காணல்



புதுக்கோட்டை,பிப்.15–

புதுக்கோட்டை சுதர்சன் பொறியியல் கல்லூரியில் மாபெரும் வளாக நேர்காணல் நேற்று நடைபெற்றது. இதில் கோவை பி.ஆர். ரெடிமிக்ஸ் நிறுவனத்தின் மனித வள மேம்பாட்டு அதிகாரிகள் நேர்காணலை இரண்டு சுற்றுகளாக நடத்தி இறுதி ஆண்டு கட்டிட பொறியியல் துறையை சார்ந்த 6 மாணவர்களைத் தேர்வு செய்தனர். இதில் மாணவர்களின் திறன் அறிவு பரிசோதனை நடத்தப்பட்டது. நேர்காணலை கல்லூரி முதல்வர் கு.ஸ்ரீநிவாஸன் துவக்கி வைத்தார், நிகழ்ச்சியை துவக்கி வைத்து அவர் கூறுகையில் மாணவர்களின் திறனறிவும் கட்டடவியல் திறன் மேம்பாடும் வேலைவாய்ப்பிற்கு எவ்வளவு முக்கியம் என்பதை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியை கல்லூரியின் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை தலைவர் சூ. ஜான் ஜோசப் ஏற்பாடு செய்திருந்தார். தேர்வு செய்யப்பட்ட மாணாக்கரை சுதர்சன் கல்வி நிறுவனத்தின் தாளாளர் ஸ்ரீ விஜய்குமார், செயலாளர் ஸ்ரீ அஜய்குமார் மற்றும் ஆம்பிவெஞ்சர்ஸ் தலைமை செயலதிகாரி ப்ரதீப்குமார் பாராட்டினர். இறுதியாக மாணவர்களுக்கு பணி நியமன ஆணைகளை கல்லூரி முதல்வர் கு. ஸ்ரீநிவாஸன் வழங்கினார்.

# மண்டல அளவிலான அறிவியல் கண்காட்சி போட்டியில் கடையநல்லூர் அரசு ஆண்கள் பள்ளி மாணவர் சாதனை



தென்காசி,பிப்.15–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர்,கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியும்,இந்து தமிழ் திசையும் இணைந்து பள்ளி மாணவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும்புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு வழிகோலவும் மண்டல அளவிலான அறிவியல் திருவிழா நேஷனல் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது.

இக்கண்காட்சியில் பல்வேறு பள்ளிகளில் இருந்து மாணவர்கள் கலந்து கொண்டு தங்களுடைய கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தியிருந்தனர். இதில் கடையநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12–ம் வகுப்பு பயிலும் மாணவர் ஹிதயத்துல்லா கலந்து கொண்டு தன்னுடைய புதிய கண்டுபிடிப்பான பெண்கள் பாதுகாப்பு கருவியும் ,கழிவு பொருளிலிருந்துசெய்தகலவை எந்திரமும் அனைவருடைய பாராட்டினைப் பெற்று இரண்டாம் இடத்தைபெற்றது. வெற்றி பெற்ற மாணவரை பொறியியல் கல்லூரியில் முதல்வர்பாராட்டி பரிசினை வழங்கினார்.

பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பள்ளியின் தலைமை ஆசிரியர் ச. ராஜகோபால், வணிகவியல் ஆசிரியர் ராஜன், முதுகலை வேதியியல் ஆசிரியர்பீர்முகமது முதுகலை தமிழாசிரியர் சு. சண்முகசுந்தரம், வகுப்பு ஆசிரியர் திருமலைச்செல்வி, முதுகலை இயற்பியலாசிரியர் ராஜேஷ்குமார்மற்றும்அனைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் பாராட்டினர்.

# புதுக்கோட்டையில் மாவட்ட அளவிலான இலக்கிய மன்றப்போட்டி, வினாடி, வினாப்போட்டியினை முதன்மைக்கல்வி அலுவலர் தொடங்கி வைத்தார்



புதுக்கோட்டை, பிப். 15–

புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக தேர்வுக்கூட அரங்கில் நேற்று மாவட்ட அளவிலான இலக்கியமன்றம், வினாடி, வினாப் போட்டிகள் நடைபெற்றது. போட்டியினை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா தலைமை தாங்கி தொடங்கி வைத்து பேசும்போது கூறியதாவது, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6– ம் வகுப்பு முதல் 9– ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் ஆகஸ்டு2023 , நவம்பர் 2023ஆகிய மாதங்களில் நடைபெற்ற வட்டார அளவிலான இலக்கிய மன்றம்,சிறார் திரைப்படம், வினாடி, வினா, வானவில் மன்றம் ஆகிய போட்டிகளில் உள்ள 10 தலைப்புகளில் ஒவ்வொருதலைப்பிலும்தேர்வு செய்யப்பட்ட 2 மாணவர்கள் வீதம் கல்வியியல் தகவல் மேலாண்மை முறைமையில் ( எமிஸ்) பதிவேற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான போட்டி நடத்தப்பட இருக்கிறது.

இன்று [புதன்கிழமை] நடைபெறும் இலக்கிய மன்றம், வினாடி, வினாப்போட்டியினைத் தொடர்ந்து சிறார் திரைப்படம், வானவில் மன்றம் ஆகியப் போட்டிகள் நாளை மறுநாள் 16ந்தேதி( வெள்ளிக்கிழமை) நடைபெற இருக்கிறது. இன்று [புதன்கிழமை] நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ளும் உங்களில் இருந்து ஒவ்வொரு தலைப்பிலும் சிறந்த மூன்று மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட இருக்கிறது. குறிப்பாக இதில் ஒவ்வொரு தலைப்பிலும் முதலிடம் பெறும் மாணவர் அடுத்த வாரம் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிக்கு அனுப்பப்பட உள்ளனர்.

மாநில அளவிலான போட்டிகள் இந்த மாதம் 22 ந்தேதி முதல் அடுத்த மாதம் 7- ந்தேதி வரை நடைபெற உள்ளது. மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெறும் சிறந்த மாணவர்கள் பள்ளிக்கல்வித்துறையால் வெளிநாடுகளுக்கு கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள மாவட்ட அளவிலானபோட்டியில்வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க வாழ்த்துகிறேன்.இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக முதன்மைக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் கி. வேலுச்சாமி வரவேற்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் நடுவர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள், மாணவ,மாணவிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். முடிவில் புதுக்கோட்டை பள்ளித்துணை ஆய்வாளர் குரு.மாரிமுத்து நன்றி கூறினார்.

# டெல்லியில் போராடி வரும் விவசாயிகளுடன் பிரதமர் மோடி நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த கோரிக்கை



டெல்லி : பிப். 15–

கடந்த 2020-21ம் ஆண்டில் நடத்தப்பட்ட விவசாயிகள் போராட்டத்தின் போது, மத்திய அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதை கண்டித்து, விவசாயிகள் மீண்டும் போராட்டம் அறிவித்துள்ளனர்.

தடைகளை மீறி வர முயன்ற விவசாயிகள் மீது டெல்லி போலீசார் டிரோன் மூலம் கண்ணீர் புகை குண்டு வீசியதால் டெல்லி எல்லை பகுதிகள் போர்க்களமாக மாறின. பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரப்பிரதேச மாநில எல்லைகளில் போலீசாரும் துணை ராணுவத்தினரும் குவிக்கப்பட்டு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

கடந்த 2020ம் ஆண்டு மத்திய பாஜ அரசு சர்ச்சைக்குரிய 3 வேளாண் சட்டங்களை கொண்டு வந்தது. விவசாயிகளின் கடும் எதிர்ப்பை மீறி கொண்டு வரப்பட்ட இந்த சட்டத்தை எதிர்த்து டெல்லியில் பெரும் போராட்டம் வெடித்தது. சுமார் 13 மாதங்கள் நீடித்த விவசாயிகள் போராட்டத்தால் மத்திய அரசு கதி கலங்கியது. கொரோனா பரவலுக்கு மத்தியிலும் விவசாயிகள் எதற்கும் அஞ்சாமல் போராடினர். கடும் குளிர், உறைபனியிலும் ஓயாமல் நடத்தப்பட்ட இப்போராட்டத்தில் 800 விவசாயிகள் பலியாகினர்.

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பல உலக தலைவர்கள் விவசாயிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர். இறுதியில், விவசாயிகளுக்கு பணிந்த மத்திய அரசு 3 வேளாண் சட்டங்களையும் வாபஸ் பெற்றது. அதோடு, அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய சட்டம் கொண்டு வரப்படும் என்பது உள்ளிட்ட வாக்குறுதிகளை அளித்தது. இதனால், 2021ம் ஆண்டு இறுதியில் விவசாயிகள் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

ஆனால் தற்போது வரையிலும் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை மத்திய பாஜ அரசு நிறைவேற்றித் தரவில்லை. இதனை தொடர்ந்து விவசாய அமைப்புகள் 'டெல்லி சலோ' போராட்டத்திற்கும் அழைப்பு விடுத்தன. அண்டை மாநிலங்களான பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசத்தில் இருந்து பஞ்சாப் கிசான் மஸ்தூர் சங்கம் உள்ளிட்ட சுமார் 200 விவசாய சங்கங்களைச் சேர்ந்த 1 லட்சம் விவசாயிகள் டெல்லி நோக்கி படையெடுத்தனர். கடந்த முறையைப் போலவே நீண்ட நாள் போராட்டத்திற்கு தயாராக 6 மாதத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள், டெண்ட், டீசல், ஜெனரேட்டர் சகிதமாக விவசாயிகள் முழு முன்னேற்பாடுகளுடன் டிராக்டர்கள் மூலம் டெல்லி நோக்கி புறப்பட்டனர்.

விவசாயிகளை டெல்லிக்குள் அனுமதிக்க மறுத்து போலீசாரும், துணை ராணுவப் படையினரும் தடுப்புகள் அமைத்தும், கண்ணீர் புகை குண்டுகள் வீசியும் தடுக்க முற்பட்டனர். போலீசார் அமைத்த தடுப்புகள், கம்பி வேலிகளை தகர்த்து விவசாயிகள் டெல்லிக்குள் முன்னேறி வருகின்றனர். தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள விவசாய அமைப்புகள் இந்த போராட்டத்திற்க்கு ஆதவராக நாளை முழு அடைப்பு போராட்டத்தில் ஈடுபட அழைப்பு விடுக்கபட்டுள்ளது. விவசாயிகள் போராட்டத்திற்க்கு ஆதரவளிக்க வணிகர் சங்கங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் பிரதமர் மோடி நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சட்டசபையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை ஆர்.பி.உதயக்குமாருக்கு ஒதுக்கீடு



சென்னை : பிப். 15–

எதிர்க்கட்சி துணைத்தலைவர் இருக்கை விவகாரம் தொடர்பாக எடப்பாடி பழனிசாமியின் கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சபாநாயகருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அ.தி.மு.க.வில் ஏற்பட்ட மோதல் உச்சகட்டத்தை எட்டிய நிலையில், கடந்த 2022–ம் ஆண்டு ஜூலை 11–ம் தேதி எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஓ.பன்னீர்செல்வம், மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். ஓ.பன்னீர்செல்வம் வகித்து வந்த எதிர்க்கட்சி துணை தலைவர் பதவிக்கு ஆர்.பி. உதயக்குமாரை நியமித்து சபாநாயகருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

எதிர்க்கட்சி துணை தலைவருக்கான இருக்கை எதிர்க்கட்சி தலைவரின் இருக்கை அருகிலேயே இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அ.தி.மு.க. தரப்பில் தொடர்ந்து கோரிக்கை வைத்தும், எதிர்க்கட்சி துணைத்தலைவர் இருக்கை விஷயத்தில் சபாநாயகர் அப்பாவு எந்த முடிவும் எடுக்காமல் பிடிவாதமாக இருக்கிறார். சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவர், துணைத்தலைவர் அருகருகே இருக்க வேண்டும். இதுதான் மரபு. இதை பல முறை கோடிட்டு காட்டியும் சபாநாயகர் அதை கண்டுகொள்ளாமல் இருப்பதாக எடப்பாடி பழனிசாமி திங்கள்கிழமை சட்டசபையில் தெரிவித்தார். சபாநாயகர் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள் என்றும் கூறினார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை மறுபரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி சபாநாயகருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரை செய்தார். இந்த நிலையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை ஆர்.பி.உதயக்குமாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஓ.பன்னீர்செல்வத்தின் இருக்கை மாற்றம் செய்யப்பட்டு, 2வது வரிசையில் முன்னாள் பேரவைத் தலைவர் தனபாலுக்கு அருகில் இருக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# துப்பாக்கி சுடுதலில் இஷா, மஹினனுக்கு தங்கப் பதக்கம்

**கிரனடா : பிப். 15,**

**ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஸ்பெயினில் உள்ள கிரனடா நகரில் நடைபெற்று வருகிறது.**



இதில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் இஷா அனில் தக்சலே இறுதி சுற்றில் 251.8 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார். மற்றொரு இந்திய வீராங்கனையான ஷாம்பவி ஷிர்சாகர் 227.6 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியா 3 பதக்கங்களையும் முழுமையாக கைப்பற்றியது. உமாமகேஷ் மஹினன் இறுதி சுற்றில் 252.1 புள்ளிகளுடன் தங்கப் பதக்கம் வென்றார். மற்ற இந்திய வீரர்களான பார்த் மானே 250.6 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கமும், அஜய் மாலிக் 229 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கமும் கைப்பற்றினர்.

# தேசிய சப்-ஜூனியர் அட்யா பட்யா தமிழக மகளிர் அணிக்கு வெண்கலப் பதக்கம்

**சென்னை : பிப். 15,**

**மகாராஷ்டிர மாநிலம் ஷேகானில் உள்ள மவுலி பள்ளியில் தேசிய சப்-ஜூனியர் அட்யா பட்யா சாம்பியன்ஷிப் நடைபெற்றது.**



இதில் தமிழக ஆடவர் அணி லீக் சுற்றில் கேரளா, டெல்லி, ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் ஆகிய அணிகளை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது. ஆனால் கால் இறுதி சுற்றில் தமிழக அணி, புதுச்சேரியிடம் தோல்வி அடைந்து பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தது.

அதே வேளையில் மகளிர் பிரிவில் தமிழக அணி வெண்கலப் பதக்கம் கைப்பற்றியது. லீக் சுற்றில் தமிழக மகளிர் அணி கோவா, அருணாச்சல் பிரதேசம், ஆந்திரா, ஒடிசா அணிகளை வீழ்த்தியது. தொடர்ந்து கால் இறுதியில் கர்நாடகாவை தோற்கடித்தது. இதன் பின்னர் நடைபெற்ற அரை இறுதி சுற்றில் தமிழக மகளிர் அணி புதுச்சேரியிடம் தோல்வி கண்டது. இதனால் வெண்கலப் பதக்கத்துடன் தமிழக மகளிர் அணி தொடரை நிறைவு செய்தது.

# எனது சொந்த ஊரில் அஸ்வின் அந்த மகத்தான சாதனையை படைப்பதே விதி - ஜடேஜா

**ராஜ்கோட் : பிப். 15,**

**இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.**



இரு அணிகள் இடையேயான 5 டெஸ்ட் கொண்ட தொடரில் முதல் போட்டியில் இங்கிலாந்து அணியும் 2-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியும் வெற்றி பெற்று தொடரில் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் போட்டி குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இன்று தொடங்குகிறது.

இந்நிலையில் எனது சொந்த ஊரான ராஜ்கோட்டில் அஸ்வின் தனது 500-வது விக்கெட்டுகளை வீழ்த்துவார் என்பதே விதி என ஜடேஜா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- அஸ்வினுடன் நிறைய ஆண்டுகள் விளையாடி இருக்கிறேன். அவருக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். இங்கிலாந்து அணிக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் அஸ்வின் தனது 500-வது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்துவார். முதல் டெஸ்ட் போட்டியிலேயே அதை நிகழ்த்துவார் என நினைத்தேன். பரவாயில்லை எனது சொந்த ஊரான ராஜ்கோட்டில் அஸ்வின் அந்த சாதனையை படைக்க வேண்டும் என்பதே விதி என்று அவர் கூறினார்.

வரலாறு சினிமா

# “என் அடுத்த பட ஷூட்டிங்கை தொடங்கிவிட்டேன்” ஆமிர்கான் அறிவிப்பால் ரசிகர்கள் மகிழ்ச்சி

**பெங்களூரு : பிப். 15,**

**பாலிவுட் நடிகர் ஆமீர்கான் நடிப்பிலிருந்து ஓராண்டு விலகியிருந்த நிலையில், தற்போது புதிய படம் ஒன்றில் நடித்து வருதாக தெரிவித்திருப்பது ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.**



கடந்த 2022-ம் ஆண்டு இறுதியில் திரையரங்குகளில் வெளியானது ஆமீர்கானின் ‘லால் சிங் சத்தா’. ‘பாரஸ்ட் கம்ப்’ படத்தின் தழுவலாக உருவான இப்படம் வெற்று பிரசாரத்தால் பெரிய அளவில் மக்களிடையே சென்று சேரவில்லை. இதையடுத்து தான் நடிப்பிலிருந்து ஓராண்டு விலகியிருப்பதாக நடிகர் ஆமீர்கான் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அவர் தயாரிப்பில் உருவாகியுள்ள ‘லாபடா லேடீஸ்’ படத்தின் சிறப்பு திரையிடல் பெங்களூருவில் நடைபெற்றது.


இந்தப் படத்தை ஆமீர்கானின் முன்னாள் மனைவி கிரண் ராவ் இயக்கியுள்ளார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஆமீர்கானிடம் அவரது அடுத்த படம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், “கடந்த வாரமே என்னுடைய புதிய படத்தின் படப்பிடிப்பை தொடங்கிவிட்டேன். ‘சிதாரே ஜமீன் பர்’ என படத்துக்கு தலைப்பிடப்பட்டுள்ளது. இது ‘தாரே ஜமீன் பர்’ படத்தின் அடுத்த கட்டம்.

இரண்டு படங்களின் கதையும் கதாபாத்திரங்களும் வெவ்வேறானவை. ‘தாரே ஜமீன் பர்’ திரைப்படம் உங்களை கண்ணீர் சிந்த வைத்திருக்கும். ஆனால் இப்படம் உங்களை சிரிக்க வைக்கும். பிரசன்னா இயக்கி வரும் இப்படம் சிறந்த பொழுதுபோக்கு படமாக இருக்கும். படத்தை இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டியை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியிட திட்டமிட்டுள்ளோம்” என்றார்.

# ‘கங்குவா’ படத்தின் போஸ்ட் புரொடக்‌ஷன் பணியில் நடிகர் சூர்யா

**சென்னை : பிப்.15,**

**இயக்குனர் சிவா இயக்கத்தில் ‘கங்குவா’ என்ற புதிய படத்தில் நடிகர் சூர்யா நடித்து உள்ளார். இந்த படம் மீது மிகுந்த எதிர்பார்ப்பு உள்ளது.**



இந்த படத்தில் கதாநாயகியாக திஷா பதானி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் பாலிவுட் நடிகர் பாபி தியோல் நடித்துள்ளார். படத்தின் ஒளிப்பதிவாளர் வெற்றி பழனிசாமி. இப்படத்திற்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். சூர்யா 6 வேடங்களில் நடித்துள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு 2 வருடங்களாக நடந்தது. தற்போது படப்பிடிப்பு முழுவதும் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில் இந்த படத்தின் ‘போஸ்ட் புரொடக்‌ஷன்’ பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. இந்த படத்தின் டிஜிட்டல் பணிகளை நடிகர் சூர்யா நேரில் பார்வையிட்டார். அதை தொடர்ந்து படக்குழுவை பாராட்டி நன்றி தெரிவித்தார். கங்குவா திரைப்படம் உலகம் முழுவதும் விரைவில் திரையிடப்பட உள்ளது.

# பிரைம் வாலிபால் லீக் 3-வது சீசன் : சொந்த மண்ணில் பட்டம் வெல்ல ஆயத்தமாகும் சென்னை பிளிட்ஸ்

**சென்னை : பிப். 15,**

**பிரைம் வாலிபால் லீக்கின் 3-வது சீசன் போட்டிகள் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று தொடங்குகிறது.**

வரும் மார்ச் 21-ம் தேதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் நடப்பு சாம்பியன் அகமதாபாத் டிபன்டர்ஸ், பெங்களூரு டார்பிடோஸ், கோழிக்கோடு ஹீரோஸ், சென்னை பிளிட்ஸ், ஹைதராபாத் பிளாக் ஹாக்ஸ், கொச்சி புளு ஸ்பைக்கர்ஸ், கொல்கத்தா தண்டர்போல்ட்ஸ், மும்பை மீட்டியார்ஸ் ஆகிய அணிகளுடன் டெல்லி டூபான்ஸ் அறிமுக அணியாக களமிறங்குகிறது.

முதல் இரு சீசன்களிலும் லீக் சுற்றை கடக்காத சென்னை பிளிட்ஸ் அணியானது இம்முறை சொந்த மண்ணில் பட்டம் வெல்லும் முனைப்புடன் உள்ளது. பயிற்சியாளர் தட்சிணாமூர்த்தி, கேப்டன் அகின் ஆகியோரது முன்னிலையில் கடந்த இருவாரங்களாக சென்னை பிளிட்ஸ் அணி தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. இம்முறை அணியில் சர்வதேச போட்டிகள் மற்றும் உலகளாவிய லீக்கில் விளையாடி உள்ள வீரர்களுடன் இளம் வீரர்களும் இடம் பெற்றுள்ளனர். மிடில் பிளாக்கரான அகின் ஆசிய சாம்பியன்ஷிப், ஆசிய விளையாட்டு, தெற்காசிய விளையாட்டு, ஒலிம்பிக் தகுதிசுற்று ஆகியவற்றில் இந்திய அணிக்காக விளையாடிய அனுபவம் கொண்டவர்.

யுனிவர்சல் ரோலில் விளையாடக்கூடிய இளம் வீரரான அப்துல் முக்னி சிஷ்டி 2021-ம் ஆண்டு ஜூனியர் தேசிய போட்டியிலும், கேலோ இந்தியா விளையாட்டிலும் பங்கேற்றுள்ளார். அவுட் சைடு ஹிட்டர் ஸ்பைக்கராக செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த டக்ளஸ் புயேனா இடம் பெற்றுள்ளார். மற்றொரு வெளிநாட்டு வீரராக மிடில் பிளாக்கரில் சிறப்பாக செயல்படக்கூடிய ருமேனியாவைச் சேர்ந்த லியாண்ட்ரோ ஜோஸ் உள்ளார்.




அதே வேளையில் அட்டாக்கராக உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த ஹிமான்ஷு தியாகி இடம்பெற்றுள்ளார். ஹிமான்ஷு தியாகி யு-23 ஆசிய சாம்பியன்ஷிப்பில் வெள்ளிப்பதக்கம் வென்றவர். அனைத்து இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான போட்டி மற்றும் கேலோ இந்தியா விளையாட்டிலும் தங்கம் வென்றுள்ளார். இந்திய கடற்படை, சர்வீசஸ் அணிகளுக்காகவும் விளையாடி வருகிறார்.

நட்சத்திர வீரராக அறியப்படும் ஜோபின் வர்க்கீஸ், யுனிவர்சல் ரோலில் விளையாடும் திறன் கொண்டவர். ஆசிய கிளப் சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கேற்ற அவர், இந்தியன் வங்கி வீரராகவும் உள்ளார். யுனிவர்சல் ரோலில் ஹரியாணாவைச் சேர்ந்த இளம் வீரரான பராஸ் ருல்யனும் அணிக்கு பலம் சேர்க்கக்கூடும்.

டெல்லியைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த செட்டரான சமீர் சவுத்ரி அணியில் மிகுந்த அனுபவம் மிக்க வீரராக திகழ்கிறார். கடந்த 2021-ம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற யு-19 உலக சாம்பியன்ஷிப்பில் இந்திய அணிக்காக விளையாடி உள்ளார். பக்ரைனில் நடைபெற்ற யு-20 ஆசிய சாம்பியன்ஷிப்பில் இந்திய அணியில் இடம்பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றார். 2022-ம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற சீனியர் ஏவிசி கோப்பை, 2023-ம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற உலக பல்கலைக்கழக போட்டியில் பங்கேற்றார். 2022-ம் ஆண்டு கர்நாடகாவில் நடைபெற்ற அனைத்து இந்திய பல்கலைக்கழக போட்டி, மகாராஷ்டிராவில் நடைபெற்ற இளையோர் தேசிய வாலிபால் சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

இவர்களுடன் தமிழகத்தைச் சேர்ந்த ஜோயல் பெஞ்சமின் (அட்டாக்கர்), நாஞ்சில் சூர்யா (செட்டர்), பிரபாகரன், ராமநாதன் (லிபேரோ), சயந்த் (பிளாக்கர்) ஆகியோரும் சென்னை பிளிட்ஸ் அணியில் இடம் பெற்றுள்ளனர். இதில் ஜோயல் பெஞ்சமின் 3 ஆண்டுகள் தமிழக அணிக்காக விளையாடி உள்ளார். 2021-ம் ஆண்டு மேற்கு வங்கத்தில் நடைபெற்ற ஜூனியர் சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

இந்த சீசனில் எதிர்கொள்ள உள்ள சவால்கள் குறித்து சென்னை பிளிட்ஸ் அணியின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி துளசி ரெட்டி கூறும்போது, “கடந்த இரு சீசன்களிலும் நாங்கள் சிறந்த திறனை வெளிப்படுத்தவில்லை. இம்முறை சிறந்த அளவில் தயாராகி உள்ளோம். அனுபவம், இளம் திறனாளர்களை கொண்டு அணி சிறந்த கலவையாக உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த சீசன்களில் செய்த தவறுகளை திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

சொந்த மண்ணில் விளையாட உள்ளதால் ரசிகர்களின் ஆதரவு எங்களுக்கு கூடுதல் ஊக்கம் அளிக்கும். இம்முறை சூப்பர் 5 சுற்றில் நுழைவதையே முதல் இலக்காக கொண்டுள்ளோம். பின்னர் அங்கிருந்து பிளே ஆஃப் சுற்று, இறுதிப் போட்டி கனவை நோக்கி முன்னேற முயற்சி செய்வோம்.

இம்முறை பிளாக்கர், செட்டர் வீரர்கள் சிறப்பாக அமைந்துள்ளனர். இதனால் மிகுந்த நம்பிக்கையுடன் களமிறங்குகிறோம். முதல் போட்டியிலேயே நடப்பு சாம்பியனான அகமதாபாத்தை சந்திக்கிறோம். சவால் நிறைந்ததாகவே இருக்கும். எப்போதுமே தொடரை வெற்றியுடன் தொடங்குவது மிகவும் முக்கியம். அந்த வகையில் சொந்த மண்ணில் வெற்றியுடன் 3-வது சீசனை தொடங்குவதில் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறோம்” என்றார்.

சென்னை பிளிட்ஸ் அணி : அகின் ஜி.எஸ். (கேப்டன்) அப்துல் முக்னி சிஷ்டி, டக்ளஸ் புயேனோ, ஹிமான்ஷு தியாகி, ஜோபின் வர்கீஸ், லியாண்ட்ரோ ஜோஸ், நாஞ்சில் சூர்யா.எம், பராஸ் ருல்யன், பிரபாகரன்.பி, ராமன் குமார், ராமநாதன். ஆர், சமீர் சவுத்ரி, சயந்த், ஜோயல் பெஞ்சமின்

# பெற்ற உதவிக்காக கோடிகளை புறந்தள்ளிய தோனி - நெகிழும் ‘பேட்’ நிறுவன உரிமையாளர்

**மும்பை : பிப். 15,**

**முன்னாள் கேப்டன் மகேந்திர சிங் தோனி பயன்படுத்தும் பேட்களை அவருக்கு செய்து கொடுக்கும் BAS நிறுவன உரிமையாளரான சோமி கோலி என்பவர் தோனி குறித்து பேசியுள்ள வீடியோ வைரலாகி வருகிறது.**

பீட் ஆல் ஸ்போர்ட்ஸ் (BAS) உரிமையாளர் சோமி கோலி சமீபத்தில் யூடியூப் சேனல் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், “2019 உலகக் கோப்பைக்கு முன்பாக தோனி என்னை அழைத்து எங்கள் நிறுவனத்தின் ஸ்டிக்கர்களை அனுப்பி வைக்குமாறும் அதை தன்னுடைய பேட்டில் பயன்படுத்தபோவதாகவும் கூறினார். மேலும், இதற்காக எந்தவிதமான பணமும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் தோனி தெரிவித்தார்.

ஒரு நட்சத்திர வீரர் இதுபோல பணமில்லாமல் பேட்களை பயன்படுத்தப்போகிறார் என்றால் பல கோடி ரூபாய் ஒப்பந்தங்களை இழக்க வேண்டியிருக்கும். இதனை தோனியிடம் வெளிப்படுத்தி இதெல்லாம் வேண்டாம் என்று மறுத்தேன். ஆனால் தோனியோ, ‘எனது ஆரம்பகாலகட்டத்தில் நீங்கள்




எனக்கு உதவியிருக்கிறீர்கள். இப்போது நான் உங்களுக்கு எதாவது செய்ய வேண்டும்’ என்று எங்கள் நிறுவன ஸ்டிக்கர்களை பயன்படுத்தினார் தோனி. உண்மையிலேயே அவருக்கு மிகப் பெரிய மனது” என்று BAS நிறுவன உரிமையாளர் நெகிழ்ந்து பேசியிருக்கிறார்.

தோனியின் பயோபிக் படமான ‘MS Dhoni The Untold Story’ இந்த சோமி கோலி கதாபாத்திரம் இடம்பெற்றிருக்கும். தோனியின் நண்பராக வரும் பரம்ஜித் சிங் என்கிற கதாபாத்திரம் தோனிக்கான கிரிக்கெட் கிட்கள் செய்யக்கோரி சோமி கோலியிடமே அணுகியிருப்பார். அதில் காட்டப்பட்டது போலவே, நிஜத்தில் தோனிக்கு முதல்முதலாக கிட்களை ஸ்பான்சர் செய்தது சோமி கோலி. இதற்கு முந்தையை பேட்டி ஒன்றிலும் சோமி கோலி இதனை வெளிப்படுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கம்மின்ஸ் வருகை ஐதராபாத் அணிக்கு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் - சுனில் கவாஸ்கர்

**புதுடெல்லி : பிப். 15,**

**17-வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் இறுதியில் தொடங்குகிறது.**

இதற்கான ஏலத்தில் ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணி, ஆஸ்திரேலிய கேப்டன் பேட் கம்மின்சை ரூ. 20½ கோடிக்கு வாங்கியது. இதனால் இந்த சீசனில் ஐதராபாத் அணியின் கேப்டனாக கம்மின்ஸ் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர் கூறுகையில், ‘ஏலத்தில் ஐதராபாத் அணி கம்மின்சை வாங்கியதை புத்திசாலித்தனமான முடிவாக நான் பார்க்கிறேன். அவர் கொஞ்சம் அதிக விலைக்கு வாங்கப்பட்டு இருந்தாலும், அவரது வருகையால் கடந்த ஆண்டு கேப்டன்ஷிப்பில் இருந்த



குறைபாடு நீங்கும். கடந்த முறை சில முக்கியமான போட்டிகளில் ஐதராபாத் அணியின் பந்து வீச்சில் குழப்பமாக இருந்தது. அதன் காரணமாகவே அவர்கள் சில ஆட்டங்களில் தோல்வியை தழுவினர். தற்போது கம்மின்ஸ் ஐதராபாத் அணியில் இணைவதால் அவர் நிச்சயம் கேப்டனாக நியமிக்கப்படுவார். அத்துடன் அவரது வருகை அணியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன்’ என்றார்.

# காதலர் தின ஸ்பெஷல் : மகன்களுக்கு முத்தமிட்டு கொஞ்சிய நயன்தாரா



**சென்னை : பிப். 15,**

**காதலர் தின ஸ்பெஷலில் நடிகை நயன்தாரா தனது இரு மகன்களையும் கொஞ்சி முத்தமிட்டபடி இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். கியூட்டான இந்தப் புகைப்படங்களுக்கு ரசிகர்கள் லைக்ஸ் அள்ளித் தெளித்து வருகின்றனர்.**

காதலர் தின ஸ்பெஷலில் பலரும் தங்களது இணைக்கு காதலைத் தெரிவித்தும் வாழ்த்துகளைக் கூறியும் புகைப்படங்களை பகிர்ந்து வருகின்றனர். இந்தக் கொண்டாட்டத்தில் நடிகை நயன்தாராவும் இணைந்துள்ளார். ஒவ்வொரு வருடமும் தனது கணவர் விக்னேஷ் சிவனுடன் புகைப்படங்களைப் பகிர்ந்து வரக்கூடியவர் இந்த வருடம் ஒரு அம்மாவாக தனது இரு மகன்களைக் கொஞ்சி முத்தமிட்டு அணைத்தபடி இருக்கும் கியூட்டானப் புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளார்.

இந்தப் புகைப்படங்களைப் பகிர்ந்து, ‘என் உயிர், உலக் இருவரையும் நான் அதிகம் நேசிக்கிறேன். என்னுடைய இந்த வருடக் காதலர் தினத்தை முன்பெப்போதும் விட சிறந்ததாக்கியதற்கு நன்றி’ என உருகியுள்ளார் நயன்தாரா. மேலும், இருமகன்களுக்கும் ரோஜா கொடுத்தும் தனது அன்பை வெளிப்படுத்தியுள்ளார். குட்டீஸ்க்கும் நயன்தாரா-விக்னேஷ்சிவன் ஜோடிக்கும் ரசிகர்கள் தங்கள் காதலர் தின வாழ்த்துகளைக் கூறி வருகின்றனர்.

# ஏ.ஆர்.முருகதாஸ் - சிவகார்த்திகேயன் படப் பணிகள் தொடக்கம்

**சென்னை : பிப். 15,**

**ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் ‘எஸ்கே23’ படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கியுள்ளது.**

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் கடந்த 2020-ம் ஆண்டு வெளியானது ‘தர்பார்’. இப்படத்துக்குப் பிறகு 3 வருடங்களாக படங்களை இயக்காமல் இருந்த முருகதாஸ் தற்போது தனது புதிய படத்தை தொடங்கியுள்ளார்.



‘எஸ்கே23’ என அழைக்கப்படும் இப்படத்தில் சிவகார்த்திகேயன் நாயகனாக நடிக்கிறார். ‘சப்த சாகரதாச்சே எல்லோ’ கன்னட படத்தில் நடித்த ருக்மணி வசந்த் நாயகியாக நடிக்கிறார். இதன் மூலம் அவர் தமிழில் அறிமுகமாகிறார்.


படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார். இந்நிலையில் இப்படத்தின் பணிகள் பூஜையுடன் தொடங்கியுள்ளன. இது தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பு சிவகார்த்திகேயனின் பிறந்த நாளான 17-ம் தேதி வெளியிடப்படும் என தெரிகிறது. மோகன்லால், வித்யுத் ஜம்வால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. ஆக்‌ஷன் என்டர்டெயினராக படம் உருவாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மலையாள சினிமாவில் கால் பதிக்கும் நடிகர் அர்ஜுன் தாஸ்

**சென்னை : பிப். 15,**

**தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து வரும் நடிகர் அர்ஜுன்தாஸ் தற்போது மலையாள சினிமாவிலும் நடிகராக அறிமுகமாகிறார்.**

மலையாளத்தில் வெளியான ‘ஜூன்’, ‘மதுரம்’ படங்களின் மூலம் கவனம் பெற்றவர் இயக்குநர் அகமது கபீர். இவரது இயக்கத்தில் அண்மையில் வெளியான ‘கேரளா க்ரைம் ஃபைல்ஸ்’ இணையத்தொடர் வரவேற்பை பெற்றது. இந்நிலையில், அவர் அடுத்ததாக காதலை மையமாக கொண்டு புதிய படம் ஒன்றை இயக்குகிறார்.



இந்தப் படத்தின் நாயகனாக அர்ஜுன் தாஸ் நடிக்கிறார். இதன் மூலம் அவர் மலையாளத்தில் அறிமுகமாகிறார். ‘ஹிருதயம்’, ‘குஷி’, ‘ஹாய் நானா’ படங்களுக்கு இசையமைத்த ஹேஷாம் அப்துல் வஹாப் இப்படத்துக்கு இசையமைக்கிறார். மற்ற நடிகர்கள் குறித்த அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது.

அர்ஜுன் தாஸை பொறுத்தவரை ‘கைதி’ படத்தின் மூலம் கவனம் பெற்றவர். தற்போது, தெலுங்கில் உருவாகிவரும் பவன் கல்யாணின் ‘ஓஜி’ படத்தில் நடித்து வருகிறார். அவரது நடிப்பில் கடைசியாக வெளியான ‘அநீதி’ படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

வரலாறு உலகம்

# இந்தோனேசிய அதிபர் தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு



**ஜகார்த்தா : பிப். 15,**

**உலகின் 3-வது பெரிய ஜனநாயக நாடு இந்தோனேசியா. 20 கோடி வாக்காளர்களை கொண்ட அங்கு நேற்று அதிபர் தேர்தல் நடந்தது. மேலும் பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடந்தது.**

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. இதில் விறுவிறுப்பான ஓட்டுப்பதிவு நடந்தது. மக்கள் காலையிலேயே வாக்குசாவடி மையங்களில் குவிந்து தங்களது வாக்குகளை பதிவுசெய்தனர். இதனால் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நீண்ட வரிசை காணப்பட்டது.

தேர்தலையொட்டி நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. அதிபர் தேர்தலில் மூன்று பேர் இடையே கடும் போட்டி நிலவுகிறது. தற்போதைய அதிபர் ஜோக்கோ விடோடோ தேர்தலில் போட்டியிடவில்லை. பாதுகாப்புத்துறை மந்திரியாக பிரபோலோ சுபியாண்டோ, முன்னாள் மாகாண கவர்னர்களான அனீஸ் பஸ்லேடன், கஞ்சர் பிரனோவோ ஆகியோர் இடையே போட்டி நிலவுகிறது.

தேர்தலில் வெற்றி பெற ஒரு வேட்பாளர் 50 சதவீத வாக்குகளை பெற வேண்டும். எந்த வேட்பாளர்களுக்கும் 50 சதவீத வாக்கு கிடைக்காவிட்டால் 2-வது சுற்றுத் தேர்தல் ஜூன் மாதம் நடைபெறும். கருத்து கணிப்புகளில் பாதுகாப்பு மந்திரி பிரபோலோ வெற்றி பெறுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் 52 சதவீத வாக்குகள் பெறுவார் என்று கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இவர் தற்போதைய அதிபரின் ஆதரவை பெற்றவர் ஆவார். துணை அதிபர் பதவிக்கு அதிபர் ஜோக்கோ விடோடோவின் மகன் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நேற்று மாலை ஓட்டுப் பதிவு முடிந்ததும் அதில் பதிவான வாக்குகள் உடனே எண்ணப்படுகின்றன.

# இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே சிறந்த ராணுவ உறவு உள்ளது : பெண்டகன்




**வாஷிங்டன் : பிப். 15,**

**அமெரிக்காவின் ராணுவ தலைமை தளபதியான ஜெனரல் ராண்டி ஜார்ஜ் உடன் இந்திய ராணுவ தலைமை தளபதி மனோஜ் பாண்டே உயர்மட்ட ஆலோசனைகளை மேற்கொள்வார்.**

அமெரிக்காவின் பென்டகன் மையத்தின் ஊடகதுணை செயலாளரான சபரீனா சிங் கூறும்போது, நாங்கள் இந்தியாவுடன் ஒரு சிறந்த ராணுவ உறவையும் மற்றும் நல்ல முறையிலான தொடர்புகளையும் கொண்டிருக்கிறோம். நாங்கள் இந்தியாவில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என தொடர்ந்து கண்காணிக்க இருக்கிறோம்.

ஆனால், அதுபற்றிய முன்னேற்றத்திற்குரிய தகவல்கள் எதனையும் பகிர்வதற்கான அதிக விவரங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்று கூறினார். பாகிஸ்தான் தேர்தல் சூழல்களை பற்றிய அமெரிக்காவின் கண்காணிப்பு குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சபரீனா, பாகிஸ்தான் தேர்தல் விசயத்தில் என்ன நடக்கிறது என நாங்கள் நிச்சயம் கவனித்து வருகிறோம்.

ஆனால், அதுபற்றிய கூடுதல் விவரங்களை நீங்கள் தெரிவிக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன் என்று கூறினார். இந்திய ராணுவ தலைமை தளபதி மனோஜ் பாண்டே அமெரிக்காவுக்கு 4 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக அவர் அமெரிக்காவுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை புறப்பட்டு சென்ற நிலையில், இரு நாடுகளின் ராணுவ உறவுகள் பற்றி சபரீனா கூறியுள்ளார். இந்திய தளபதியின் இந்த பயணத்தின்போது, அமெரிக்காவின் ராணுவ தலைமை தளபதியான ஜெனரல் ராண்டி ஜார்ஜ் உடன் உயர்மட்ட ஆலோசனைகளை மேற்கொள்வார். அதனுடன் பிற மூத்த ராணுவ அதிகாரிகளுடனும் உரையாடுவார் என மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்தி குறிப்பு தெரிவிக்கின்றது.

# கம்போடியாவில் தினமும் 4 பேருக்கு எச்.ஐ.வி.



**புனோம் பென் : பிப். 15,**

**தென்கிழக்கு ஆசிய நாட்டில் தற்போது சுமார் 76 ஆயிரம் பேர் எச்.ஐ.வி.யுடன் வாழ்ந்து வருகின்றனர் என்று தேசிய எய்ட்ஸ் ஆணையம் தெரிவித்துள்ளது.**

தெற்கு ஆசிய நாடான கம்போடியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் 4 பேர் எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று தேசிய எய்ட்ஸ் ஆணையம் நேற்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் அந்த அறிக்கையில், "கம்போடியாவில் ஆண்டுக்கு ஏறத்தாழ 1,400 பேர் புதிதாக எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்படுகின்றனர் அல்லது ஒரு நாளைக்கு சுமார் 4 பேர் இந்த எச்.ஐ.வி. யால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் எச்.ஐ.வி.யால் புதிதாக பாதிக்கப்பட்டவர்களில் 42 சதவீதம் பேர் 15 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்.

தென்கிழக்கு ஆசிய நாட்டில் தற்போது சுமார் 76 ஆயிரம் பேர் எச்.ஐ.வி.யுடன் வாழ்ந்து வருகின்றனர்." என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து அந்நாட்டு மூத்த மந்திரியும், தேசிய எய்ட்ஸ் ஆணையத்தின் தலைவருமான இங் மவுலி, கம்போடியா ஒரு பொது சுகாதார அச்சுறுத்தலாக இருக்கும் எய்ட்ஸை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், 2025 க்குள் 95-95 இலக்குகளை அடைவதற்கும் உறுதி பூண்டுள்ளது என்று சமீபத்தில் கூறினார்.

எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களில் 95 சதவீதம் பேர் தங்கள் எச்.ஐ.வி. நிலையை அறிந்திருக்கிறார்கள், 95 சதவீதம் பேர் எச்.ஐ.வி. யுடன் வாழ்கிறார்கள் என்று அறிந்தவர்களில் 95 சதவீதம் பேர் உயிர்காக்கும் ஆன்டிரெட்ரோவைரல் சிகிச்சையில் உள்ளனர். "கம்போடியா ஏற்கனவே 2022 இறுதிக்குள் 86-99-98 மறுமொழி விகிதத்தை அடைந்துள்ளது," என்று இங் மவுலி கூறினார். கம்போடியாவில், முதல் எச்.ஐ.வி. தொற்று 1991 ல் கண்டறியப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பணயத்தொகை கேட்டு ருமேனிய மருத்துவமனைகளில் இணையவழி தாக்குதல்



**ருமேனியா : பிப். 15,**

**ஐரோப்பிய கண்டத்தின் தென்கிழக்கில் உள்ள நாடு ருமேனியா. இதன் தலைநகரம் புசாரெஸ்ட்.**

இங்குள்ள மருத்துவமனைகளில், நோயாளிகளின் விவரங்கள், மென்பொருள் கட்டமைப்பின் வழியே மருத்துவர்களுக்கு இடையே பரிமாறிக் கொள்ளப்படும். இந்நிலையில், கடந்த திங்கட்கிழமையன்று பிடஸ்டி குழந்தைகள் மருத்துவமனையில் துவங்கி அந்நாட்டின் பெரும்பாலான மருத்துவமனைகளின் இணையவழி கட்டமைப்பில் சைபர் தாக்குதல் நடந்துள்ளது.

தாக்குதல் நடத்தி பல நோயாளிகளின் தரவுகளை திறந்து பார்க்க முடியாதவாறு சைபர் குற்றவாளிகள் "லாக்" செய்து விட்டனர். தரவுகளை "அன்லாக்" செய்ய, தாக்குதலை நடத்தியவர்கள் 1,30,000 பவுண்டு பணயத்தொகையாக கேட்டனர். இந்த தொகை முழுவதும் பிட்காயின்களாக வழங்கப்பட வேண்டும் என மிரட்டல் விடுத்துள்ளனர். தற்போது வரை 25 மருத்துவமனைகள் இத்தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து தேசிய சைபர் பாதுகாப்பு ஆணையம் தீவிர விசாரணை நடத்தி வருகிறது. தாக்குதலை நடத்திய "வைரஸ்" மென்பொருளை கண்டுபிடித்த சைபர் துறையினர், இதை நிகழ்த்திய கும்பல் குறித்து தற்போது வரை கண்டறியவில்லை. தாக்குதல் நடத்தியவர்கள் கேட்கும் தொகையை மருத்துவமனைகள் தாங்களாகவே தனிப்பட்ட முறையில் வழங்கி விட வேண்டாம் என்று பாதுகாப்பு ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

பாதுகாப்பை கருதி மருத்துவமனைகளுக்கான இணையவழி தொடர்பு தற்போது துண்டிக்கப்பட்டுள்ளது. இணையவழி தொடர்பில் உள்ள "ஸ்கேனிங் மெஷின்" உள்ளிட்ட பல மருத்துவ உபகரணங்களின் பயன்பாடு இதனால் முற்றிலும் செயலிழந்து விட்டது. இதையடுத்து, அனைத்துவிதமான மருத்துவ ஆலோசனைக்கான தகவல்களையும் மருத்துவர்கள் காகிதம் மற்றும் பேனா மட்டுமே உபயோகித்து பரிமாறி கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

# நவாஸ் ஷெரீப்பின் தம்பி ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் பிரதமராகிறார்

## பிபிபி கட்சி வெளியிலிருந்து ஆதரவு



**இஸ்லாமாபாத் : பிப். 15,**

**பிஎம்எல்-என் கட்சிக்கு வெளியிலிருந்து ஆதரவு அளிக்க பிபிபி கட்சி முடிவு செய்துள்ள நிலையில் அந்நாட்டின் புதிய பிரதமராக நவாஸ் ஷெரீப்பின் சகோதரர் ஷெபாஸ் ஷெரீப் தேர்வாக உள்ளார்.**

பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தல் கடந்த 8-ம் தேதி நடைபெற்றது. அன்று மாலை முதலே வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு எந்த கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காததால் ஆட்சி அமைப்பதில் இழுபறி நீடித்து வந்தது.

பாகிஸ்தானில் மொத்தம் உள்ள 336 இடங்களில் 266 இடங்களில் நேரடி தேர்தல் நடைபெற்றது. இதில் முன்னாள் பிரதமரான இம்ரான் கானின் தெஹ்ரிக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 101 இடங்களில் வெற்றி பெற்றனர். பிஎம்எல்-என் கட்சி 75 இடங்களிலும், பிபிபி கட்சி 54 இடங்களிலும் வெற்றி பெற்றன.

எம்கியூஎம்-பி கட்சி 17 இடங்களையும், சிறிய கட்சிகளான ஜாமியத் உலேமா-இ-இஸ்லாம் (ஜேயுஐ) 4 இடங்களையும், பிஎம்எல்-குவைத் 3 இடங்களையும், இஸ்தெகாம்-இ-பாகிஸ்தான் கட்சி (ஐபிபி), பலூசிஸ்தான் தேசிய கட்சி (பிஎன்பி) தலா 2 இடங்களையும் வென்றன.

ஆட்சி அமைக்க மொத்தம் 169 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. இதில், நியமன இடங்களான 70 இடங்கள் பெண்கள், சிறுபான்மையினருக்கு கட்சிகள் பெற்ற வெற்றியின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும். அதன் அடிப்படையில் இறுதியில் பெரும்பான்மையை பெறும் கட்சி ஆட்சி அமைக்கும்.

இந்நிலையில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் (பிபிபி) தலைவர் பிலாவல் பூட்டோ சர்தாரி புதிய அரசில் அங்கம் வகிக்காமல், பிஎம்எல்-என் கட்சியை வெளியில் இருந்து ஆதரிப்பதாக அறிவித்துள்ளார். அதைத் தொடர்ந்தே தற்போது பிஎம்எல்-என் ஆட்சி அமைக்க முன்வந்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சியின் செய்தித் தொடர்பாளர் மரியம் அவுரங்கசீப் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'பிஎம்எல்-என் தலைவர் நவாஸ் ஷெரீப் (74), தனது இளைய சகோதரர் ஷெபாஸ் ஷெரீப்பை (72), பிரதமர் பதவிக்கும், தனது மகள் மரியம் நவாஸை (50), பஞ்சாப் மாகாண முதலமைச்சராகவும் பரிந்துரைத்துள்ளார். புதிய அரசை அமைக்க, பிஎம்எல்-என் கட்சிக்கு ஆதரவளித்த அரசியல் கட்சிகளுக்கு நவாஸ் ஷெரீப் நன்றி தெரிவித்துள்ளார். இதுபோன்ற முடிவுகளின் மூலம் பாகிஸ்தான் நெருக்கடிகளிலிருந்து வெளியே வரும் என் நம்பிக்கை தெரிவித்துள்ளார்'

தேர்தல் நடந்து சுமார் ஒரு வாரம் எட்டியுள்ள நிலையில், நீண்ட இழுபறிக்குப் பிறகு பாகிஸ்தானில் புதிய அரசு ஆட்சி அமைப்பதற்கான சூழல் கணிந்துள்ளது.

# மாலத்தீவு, சீனாவுக்கு செக் வைக்கும் இந்தியா

## மினிகாய், அகாட்டி தீவுகளில் புதிய கடற்படை தளங்கள்



**புதுடெல்லி : பிப். 15,**

**மாலத்தீவு மற்றும் கால் பரப்பும் சீனா ஆகிய அண்டை தேசங்களுக்கு செக் வைக்கும் வகையில் மினிகாய், அகாட்டி தீவுகளில் புதிய கடற்படை தளங்களை இந்தியா அமைக்கிறது.**

மாலத்தீவு தனது புதிய ஆட்சியாளர்களால் நீண்ட கால தோழமையான இந்தியாவைப் புறக்கணித்ததோடு, எல்லைகளில் இந்தியாவை சதா சீண்டும் சீனாவுடன் தோள் சேர்ந்திருக்கிறது. மாலத்தீவில் இருக்கும் இந்திய துருப்புகளை வெளியேறுமாறும் காலக்கெடு விதித்திருக்கிறது. சீனாவின் உளவுக் கப்பலுக்கும் மாலத்தீவு வரவேற்பு தெரிவித்திருக்கிறது.

இப்படி கடல் எல்லையில் அதிகரிக்கும் உரசல் மற்றும் உளவு முயற்சிகளை எதிர்கொள்ளும் வகையில், மினிகாய் மற்றும் அகாட்டி தீவுகளில் புதிய கடற்படை தளங்களை இந்தியா நிர்மாணிக்கிறது. ஏற்கனவே மாலத்தீவு சுற்றுலாத் தலத்துக்கு மாற்றாக லட்சத்தீவுகளை முன்னிறுத்தி பிரதமர் மோடியின் மூலம் பதிலடி தந்த இந்தியா தற்போது புதிய கடற்படை தளங்களை நிர்மாணித்து தனது கடல் எல்லை பாதுகாப்பை அதிகரிக்கிறது.

மார்ச் 4 மற்றும் 5 ஆகிய தினங்களில் மினிகாய் கடற்படை தளத்தை திறப்பதற்காக பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஐஎன்எஸ் விக்ரமாதித்யா மற்றும் ஐஎன்எஸ் விக்ராந்த் உள்ளிட்ட போர்க்கப்பல்கள் புடைசூழ அங்கே பயணம் மேற்கொள்கிறார். பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணத்திற்குப் பிறகு, இந்தியாவின் முக்கிய நகர்வாக இது பார்க்கப்படுகிறது.


மாலத்தீவிலிருந்து 524 கிலோமீட்டர் தொலைவில் உள்ள லட்சத்தீவுகளில் இந்தியா தனது புழக்கத்தை அதிகரிப்பதன் வாயிலாக, தென்கிழக்கு ஆசியா மற்றும் வட ஆசியாவிற்கான பில்லியன் டாலர் மதிப்புள்ள வணிக வர்த்தகத்தையும் இந்தியா ஊக்குவிக்க முடியும்.

மினிகாய் தீவில் புதிய விமான ஓடுதளத்தை உருவாக்கவும், அகாட்டி தீவில் ஏற்கனவே உள்ள விமான தளத்தை மேம்படுத்தவும், ஐஎன்எஸ் ஜடாயுவை நிலைநிறுத்தவும் பாதுகாப்புத் துறை முடிவு செய்துள்ளது. இது பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பிற்கு ஆதரவாகவும், இந்தோ-பசிபிக் பகுதியில் இந்தியாவின் அதிகாரத்தை முன்னிறுத்தவும் சிறப்பான உத்தியாக முன்னெடுக்கப்படுகிறது.

ஏற்கனவே அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் இந்தியா தனது படைத்திறனை வளர்த்து வரும் நிலையில், லட்சத்தீவு மற்றும் மினிகாய் தீவுகளை மேம்படுத்தும் நடவடிக்கை, வணிகக் கப்பல் போக்குவரத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், உள்கட்டமைப்பு மேம்படுத்தல் மற்றும் தீவுப் பகுதிகளில் சுற்றுலாவை வளர்க்கவும் உதவும்.

லட்சத்தீவு, மினிகாய் மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் புவியியல் இருப்பிடம், இந்தியப் பெருங்கடலில் வேகமாக விரிவடையும் சீன கடற்படையின் சவால்களை இந்தியா முறையாக எதிர்கொள்ள உதவும். அதே வேளையில், தனக்கான கடல்சார் வர்த்தக வழிகளையும் இந்தியா பாதுகாக்க முடியும். ஐஎன்எஸ் விக்ரமாதித்யா மற்றும் ஐஎன்எஸ் விக்ராந்த் உட்பட போர் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கி கப்பல்கள் அங்கே முகாமிடுவது இந்தியாவின் பாதுகாப்பு தோற்றத்தை அடுத்த கட்டத்துக்கு பிரம்மாண்டமாக எடுத்துச் செல்லவிருக்கிறது. இந்தியா தற்போது தனது எதிரிகள் மட்டுமன்றி துரோகிகளுக்கும் பதில் சொல்ல தயாராக இருக்கிறது.

# கப்பலில் இருந்து ஏவுகணைகள் வீசி வடகொரியா சோதனை



**வடகொரியா : பிப். 15,**

**வடகொரியா அடிக்கடி ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.**

தென் கொரியா, அமெரிக்காவின் எச்சரிக்கைகளை கண்டு கொள்ளாமல் சோதனை நடத்துகிறது. சமீபத்தில் தென் கொரியாவுக்கு எதிராக போருக்கு தயாராக இருக்க வேண்டும் என்று வடகொரியா அதிபர் தெரிவித்தார். இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நிலவி வருகிறது. இந்த நிலையில் வடகொரியா நேற்று மீண்டும் ஏவுகணை சோதனைகளை நடத்தி உள்ளது.

வடகொரியா தனது வடகிழக்கு கடற்பகுதியில் கப்பலில் இருந்து பல ஏவுகணைகளை வீசியதாக தென் கொரிய ராணுவம் தெரிவித்தது. மேலும் கிழக்கு கடற்கரை நகரமான பொன்சானின் வடகிழக்கு கடல்பகுதியில் கண்டறியப்பட்ட ஏவுகணைகளை தென்கொரியா, அமெரிக்க ராணுவங்கள் ஆய்வு செய்து வருவதாக தென் கொரியா கூட்டுப்படை தலைவர்கள் தெரிவித்தனர். எத்தனை ஏவுகணைகள் வீசப்பட்டன. எவ்வளவு தூரம் பறந்தன போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

# கலிபோர்னியாவில் கேரளாவை சேர்ந்த ஒரே குடும்பத்தினர் 4 பேர் மர்ம மரணம்



**அமெரிக்கா : பிப். 15,**

**கேரளாவைச் சேர்ந்தவர் அமெரிக்காவில் தனது இரட்டை குழந்தைகள் மற்றும் மனைவியைக் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

கேரளா மாநிலம் கொல்லம் பகுதியைச் சேர்ந்த ஆனந்த் ஹென்றி(42), ஆலிஸ்பிரியங்கா (40) தம்பதியினருக்கு, நோவா மற்றும் நேதன் என்ற நான்கு வயது இரட்டை குழந்தைகள் இருந்தனர். தொழில்நுட்பத் துறையில் பணியாற்றி வந்த ஆனந்த், அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் சான்மாட்டியோ என்ற நகரில் குடும்பத்தினருடன் வசித்து வந்தார்.

இவர்கள் தங்கியிருந்த வீட்டில் இருந்து துப்பாக்கி சுடும் சத்தம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கேட்டதால் அக்கம்பக்கத்தினர் உடனடியாக போலீஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீஸார் வீட்டுக்குள் நுழைய முயன்ற போது, வீட்டின் கதவு உட்பக்கமாக தாளிடப்பட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து வீட்டில் இருந்த ஜன்னல் ஒன்றின் வழியாக போலீஸார் உள்ளே சென்று பார்த்தனர்.

அப்போது, அங்கு ஆனந்தும், பிரியங்காவும் துப்பாக்கியால் சுடப்பட்ட காயங்களுடன் உயிரிழந்து கிடந்தனர். இரட்டை குழந்தைகள் இருவரும் மர்மமான முறையில் வீட்டிற்குள் உயிரிழந்து கிடந்தனர். இதையடுத்து, நால்வரது உடல்களையும் மீட்டுள்ள போலீஸார், பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தொடர்ந்து இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். போலீஸாரின் முதல் கட்ட விசாரணையில் பிரியங்காவை சுட்டுக்கொன்று விட்டு, பின்னர் ஆனந்த் தற்கொலை செய்து கொண்டிருப்பது தெரியவந்துள்ளது. மேலும் குழந்தகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் போலீஸார் சந்தேகிக்கின்றனர்.

குடும்பத்தகராறில் இந்த சம்பவம் நடைபெற்றதா அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது தொடர்பாக விசாரணை நடைபெற்ற வருவதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் காரணமாக மற்றவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும், மொத்த பகுதியும் தொடர் கண்காணிப்பில் இருப்பதாகவும் போலீஸார் தெரிவித்துள்ளனர். இதனிடையே உயிரிழந்த நால்வரது உடல்களையும் சொந்த ஊரான கேரளாவிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரசுக்கு அவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமேசானில் தன் பங்கை $4 பில்லியன் மதிப்பிற்கு விற்றார் பெசோஸ்



**அமெரிக்கா : பிப். 15,**

**1994ல் அமெரிக்காவில் ஜெப் பெசோஸ் உருவாக்கிய நிறுவனம், அமேசான்.**

2021ல் இந்நிறுவனத்தின் தலைமை பொறுப்பிலிருந்து ஜெப் பெசோஸ் விலகினார். பெசோஸ் விலகியதை தொடர்ந்து ஆண்டி ஜாசி தலைமை செயல் அதிகாரியாக அமேசானை நிர்வகித்து வருகிறார். இந்நிலையில், தற்போது 60 வயதாகும் ஜெப் பெசோஸ், தன் வசமிருந்த அமேசான் நிறுவன $4 பில்லியன் மதிப்புடைய பங்குகளை விற்றுவிட்டார்.

கடந்த வருடம், பெசோஸ், வாஷிங்டன் மாநிலத்திலிருந்து புளோரிடா மாநிலத்திற்கு குடி பெயர்ந்தார். வாஷிங்டன் மாநிலத்தில் $250,000 மதிப்பிற்கு மேல் நிறுவனத்தின் பங்குகளை விற்றால், அதற்கு 7 சதவீதம் மாநில வரி செலுத்த வேண்டும். ஆனால், புளோரிடா மாநிலத்தில் பங்குகள் விற்பனையில் ஈட்டும் வருவாய்க்கு மாநில வரி கட்ட தேவையில்லை.

இதன் மூலம் $280 மில்லியன் மதிப்பிலான தொகையை பெசோஸ் சேமிக்க முடியும். 2021ல் தனது பங்குகளில் கணிசமானவற்றை விற்ற பெசோஸ், தற்போது பெருமளவு மீண்டும் விற்றுள்ளார். தனது பங்குகளை விற்பனை செய்த நிலையிலும் அமேசானின் பிரதான பங்குதாரராக ஜெப் பெசோஸ் உள்ளார். அவரது நிகர மதிப்பு சுமார் $190 பில்லியனுக்கும் மேல் உள்ளது.

1994ல் நியூயார்க் நகரில் இருந்து சியாட்டில் நகருக்கு செல்லும் ஒரு பயணத்தின் போது பெசோஸ், இணையதளம் வழியாக புத்தகங்களை வாங்கவும், விற்கவும் ஒரு நிறுவனத்தை தொடங்க எண்ணி உடனடியாக செயல்பட தொடங்கினார். அவ்வாறு உருவான அமேசான், இன்று இணையவழி சில்லறை வணிகத்தில் உலகின் முன்னணி நிறுவனமாக திகழ்ந்து வருகிறது. கடந்த சில நாட்களாக அமேசான் நிறுவன பங்குகள் அமெரிக்க பங்கு சந்தையில் உயர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# தங்கச்சுரங்கத்தில் நிலச்சரிவு 9 தொழிலாளர்கள் உயிரோடு புதைந்தனர்

**இஸ்தான்புல் : பிப். 15,**

**துருக்கியில் கோப்லர் என்ற தங்கச்சுரங்கத்தில் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது.**

துருக்கியின் எர்சின்கான் மாகாணத்தில் உள்ளது இலிக் நகரம். இங்கு கோப்லர் என்ற தங்கச்சுரங்கம் இயங்கி வருகிறது. மலைப்பாங்கான இந்த பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை பகல் 2.30 மணி அளவில் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டு, மணல் மற்றும் பாறைகள் சரிந்து விழுந்தன.

அப்போது பள்ளத்தாக்கில் செயல்பட்டு வந்த தங்க சுரங்கத்தையும் மண் மூடியது. இந்த காட்சி ஒரு தொழிலாளியால் படம் பிடிக்கப்பட்டு உள்ளது. நிலச்சரிவு ஏற்பட்டபோது சுரங்கத்தில் 9 தொழிலாளர்கள் பணியில் இருந்ததாக தெரியவந்துள்ளது. மண்ணில் புதைந்த அவர்களின் நிலை என்ன ஆனது என்பது உடனடியாக தெரியவில்லை.

# தமிழக பேரவையில் ஒரே நாடு, ஒரே தேர்தல், தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு





# சட்டசபையில் எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கை ஆர்.பி.உதயக்குமாருக்கு ஒதுக்கீடு

# ஜாக்டோ ஜியோவின் வேலைநிறுத்தப் போராட்டம் ஒத்திவைப்பு: முதல்வரை சந்தித்த பின் அறிவிப்பு




சென்னை / புதுக்கோட்டை | 15.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டி. பி. விஜயதுங்கா, , இலங்கையின் அரசுத்தலைவர் (பி.1922)



சத்தியவாணி முத்து , தமிழக அரசியல்வாதி (பி.1923) (இ.1999)



கிரெய்க் மேத்தியூஸ் , தென்னாப்பிரிக்கத் துடுப்பாளர் (பி.1965)



## இன்றைய நினைவு நாள்

கலிப் , இந்தியக் கவிஞர் (பி.1796) (இ.1869)



டி. கே. சண்முகம் , தமிழக நாடகத், திரைப்பட நடிகர், அரசியல்வாதி (பி.1912) (இ.1973)



அழகு சுப்பிரமணியம் , இலங்கைத் தமிழ் ஆங்கில எழுத்தாளர் (பி.1915) (இ.1973)



கொத்தமங்கலம் சுப்பு , தமிழக எழுத்தாளர், நடிகர், பாடகர், இயக்குநர் (பி.1910) (இ.1974)

